# TAMIL LANGUAGE STUDIES

## PART 1.

FOR STANDARDS IV & V.

BY


A. PONNAIYA

*Superintendent, Jaffna Training College*

AND

*Inspector Training Schools.*


# தமிழ் மொழி

முதலாம் பகுதி.

நாலாம் ஐந்தாந்தரங்களுக்காக


யாழ்ப்பாண ஆசிரியகலாசாலை அதிபரும்

வித்தியாதரிசியும் ஆகிய

அ. பொன்னையா அவர்கள்


செய்தது.

---


ஏழாம் பதிப்பு.



*Copy Right Reserved.*



**1931**

விலை சதம். 25.

# தமிழ்மொழி.

தமிழ்ப்பாடசாலை 4-ம் 5-ம் தரமாணவர் தமிழிலக்கணம் என்னும் ஒருபாடம் கற்கவேண்டுமென்பது பழைய பிரமாணம். தமிழிலக்கணம் எனப்பெயர் வழங்கிய காலத்தும் மாணவர் தத்தம் தரத்திற்கேற்பத் தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் வேண்டியவராயினர். இக்காலத்துப் பாடத்திட்டம, தமிழிலக்கணம் எனவேருக ஒருபாடத்தைக் கொள்ளாது விட்டதேனும், பழையபிரமாணப்படி அத்தரங்களிலே தமிழ்மொழியில் மாணவர் அடையவேண்டிய ஆற்றல்களை வாசிப்புவாயிலாகப் பெறவேண்டுமென விதிக்கிறது. குறித்த ஆற்றல்களை வாசிப்புவாயிலாகப் பெறுதல் கூடுமேனும், அவற்றைப் படிமுறையாகவும் கிரமமாகவும் கொள்ளற்கேற்ற ஆதாரநூல்கள் இன்றியமையாதன. இதன் பொருட்டுத் தமிழிலக்கணம், 1ம் பாகம் எனப்பெயரியநூலானது, தமிழ்மொழிப்பயிற்சியை இக்காலக்கொள்கையைத் தழுவி வாசிப்புவாயிலாகப் பெறுதற்கேற்ற திருத்தங்களுடன், தமிழ்மொழி என்னும் பெயர்பெறுவதாயிற்று. இதன்கண் 4ம் 5ம் தரமாணவர் தமிழ்மொழியில் அடையவேண்டிய ஆற்றல்களை அடைதற்குரிய பல அப்பியாசவினுக்களுள.

## க. சொல். WORDS.

எங்கள் பாடசாலையில் இன்று பெற்றோர் தினக்கொண்டாட்டம் நிகழும். உபாத்தியாயர் பாடசாலையை அலங்காரஞ் செய்வதற்கு அழகும் நறுமணமும் உள்ள பலவகை மலர்களும் அவைபோல் மனத்தை மகிழ்விக்கும் பலநிறத் தளிர்களும் கொண்டுவரும்படி கூறினார். ஆறும்வகுப்பு மாணவர்களாகிய கணபதிப்பிள்ளையும் அவர் நண்பர் சிலரும் அவற்றின் பொருட்டுப் பொள்ளென நடந்தனர். அவருள் ஒருவன் ஒரு மென்மரத்திலேறிச் சிறந்த மலர்களையும் தளிர்களையும் பறித்தான். அவன் ஏறிநின்ற மரம் நெறுநெறென முறிய, அயலில் நின்ற மற்றவர்கள் ஐயோ என ஓலமிட்டனர்; ஆனால், அவன் துணிவுடையனாய் அயற்கிளைக்குப் பாய்ந்து அதனை உறுதியாகப்பற்றி எவ்வூறுபாடும் இன்றித் தப்பினான். அங்கு அந்நிகழ்ச்சி அனைத்தையும் கண்ணுற்ற அனைவரும் பேரானந்தமுற்றனர்.

| | | |
|---|---|---|
| எங்கள் | நறுமணமும் | கொண்டு |
| பாடசாலையில் | உள்ள | வரும்படி |
| இன்று | பல | கூறினார் |
| பெற்றோர் | வகை | ஆறும் |
| தினம் | மலர்களும் | வகுப்பு |
| கொண்டாட்டம் | அவை | மாணவர்கள் |
| நிகழும் | போல் | ஆகிய |
| உபாத்தியாயர் | மனத்தை | கணபதிப்பிள்ளையும் |
| பாடசாலையை | மகிழ்விக்கும் | அவர் |
| அலங்காரம் | பல | நண்பர் |
| செய்வதற்கு | நிறம் | சிலரும் |
| அழகும் | தளிர்களும் | அவற்றின்பொருட்டு |
| | | பொள்ளென |
| | | நடந்தனர். |

கீழே 3 வரிசையாகக் குறித்தவை மேல்வசனத்தின் முற்பகுதியிலுள்ள சொற்கள்.

அப்பியாசம்.

1. மேலேதனித்தனி குறித்த சொற்களாலாய மேல்வசனத்தை வாசிக்க.

2. அடுத்துவரும்வாக்கியங்களிலுள்ள சொற்களைத் தனித்தனி சொல்லுக.

3. இன்று வாசித்தபாடத்தின் முதற்பந்தியிலுள்ள சொற்களைத் தனித்தனியாக எழுதுக.

4. நடந்தபேச்சுப் பாடத்திலே வழங்கிய 10 சொற்கள் எழுதுக.

---

## உ. பெயர். NOUNS.

கையாலே தொட்டறியும் பொருட்கள்:—மூக்கு, செவி, கல். காதாலே கேட்டறியும் பொருட்கள்:—பறை, வெடி. கண்ணாலே பார்த்தறியும் பொருட்கள்:—சந்திரன், வெள்ளி. மூக்காலே மோந்தறியும் பொருட்கள்:—மல்லிகை, மகிழ். நாவாலே சுவைத்தறியும் பொருட்கள்:—உப்பு, சீனி. கை, காது, மூக்கு, கண் நா என்பன பொறிகள் எனப்படும்.

மேற்கூறிய பொருட்களுட் சிலவற்றை ஒருபொறியின் உதவியாலும், சிலவற்றை ஒன்று, இரண்டு, மூன்று பொறிகளின் உதவியாலும் அறிகின்றோம். சந்திரனைப் பார்வையால் மாத்திரம் அறிகின்றோம். மூக்கு செவி என்பவற்றைப் பார்த்தும் தொட்டும், பறை வெடி என்பவற்றைப் பார்த்தும் கேட்டும், சீனி உப்பு தேன் என்பவற்றைப் பார்த்தும் தொட்டும் சுவைத்தும் அறிகின்றோம்.

யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு முதலிய இடங்களைக் கண்டும் கேட்டும் அறிகின்றோம்.

நாம் மனத்தாலும் சில குணங்களையும், காலத்தையும் அறிகின்றோம்.

குணம்:—சந்தோஷம், துக்கம், கோபம்.

காலம்:—நேற்று, செவ்வாய்க்கிழமை, சித்திரை மாசம்.

மேற்கூறப்பட்ட சொற்கள் யாவும் பொருள், இடம், காலம், குணம் என்பவற்றின் பெயர்களாகும். சொற்கள் பொருட்களல்ல. அவை குணங்களுமல்ல.

பெயர் என்பது ஐம்பொறிகளாலும் மனத்தாலும் நாம் அறியக்கூடிய பொருளுக்கு இடப்பட்டிருக்குஞ் சொல்லாம்.

உலகத்திலுள்ள மனிதர், மிருகம், பறவை, புல், பூண்டு, கருவி, இடம் முதலிய எல்லாம் ஐம்பொறிகளால் அறியப்படும் பொருட்கள். இவைகளை உணர்த்தும் சொற்கள் எல்லாம் பெயர்ச்சொற்கள். இப்பொருட்களுடைய நிறம், வடிவம், அளவு, மணம் என்பவற்றைக் குறிக்குஞ் சொற்களும் பெயர்ச்சொற்கள்.

நிறங்கள்:—கருமை செம்மை, வெண்மை, பசுமை.

வடிவங்கள்:—வட்டம், உருண்டை, தட்டை.

அளவுகள்:—நீளம், அகலம், பெருமை, சிறுமை.

கோபம், பயம், பொறுமை, இரக்கம், அன்பு, சினேகம் என்பன நாம் மனத்தால் அறியும் குணங்களுக்கு இடப்பட்டிருக்கும் பெயர்கள்.

நாள், புதன், நாழிகை, மாசம், வருஷம் என்பன நாம் மனத்தால் அறியும் காலத்துக்கு இடப்பட்டிருக்கும் பெயர்கள்.

நான், நீ, அவன், அது, இது, எது, அவர், எவை என்பன யாவும் பெயர்கள்.

இருக்கிறவன், படிக்கிறவன், நடக்கிறவன், உண்டவன், நடந்தவன் என்பன யாவும் பெயர்கள்.

படித்தல், இருத்தல், செய்தல், நடக்கை முதலியன செய்கைகளுக்கு இடப்பட்டிருக்கும் பெயர்கள்.

## அப்பியாசம்.

1. உங்கள் வாசிப்புப் புத்தகத்தின் முதலிரண்டு பாடங்களிலுமுள்ள பெயர்ச்சொற்களைக் கூறுக. 2. படித்தகதையொன்றிலுள்ள 12 பெயர்ச்சொற்கள் எழுதுக. 3. பத்துத்தொட்டறியும் பொருட்களின் பெயர்கள் கூறுக. 4. இனிப்பு, துவர்ப்பு, கசப்பு, உவர்ப்பு, கார்ப்பு என்ற சுவைகளை எப்பொறிகளால் அறிகின்றோம்? 5. மேற்கூறிய சுவைகளுள்ள இவ்விரண்டு பொருட்கள் கூறுக. 6. மனத்தால் அறியப்படும் குணங்களின் பெயர்களுள் பத்துக்கூறுக. 7. கண்ணால் மாத்திரம் பார்த்தறியும் பொருட்களின் பெயர்கள் ஆறு கூறுக. 8. பார்த்து அறியுங் குணங்களின் பெயர்கள் பத்துக்கூறுக. 9. காலத்தின் பிரிவுகளுக்கு இடப்பட்டிருக்கும் பெயர்களுள் பன்னிரண்டு கூறுக. 10. மரத்திலுள்ள பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் கூறுக. 11. மனிதரிலுள்ள உறுப்புக்களின் பெயர்கள் கூறுக. 12. பள்ளிக்கூடத்திலுள்ள பொருட்களின் பெயர்கள் கூறுக. 13. வீட்டிலுள்ள பொருட்களின் பெயர்கள் கூறுக. 14. கோவிலிலுள்ள பொருட்களின் பெயர்கள் கூறுக. 15. வேலைகளின் பெயர்கள் பத்துக் கூறுக.

## ௫. வினை. VERBS.

இராமன் வந்தான். நீ தந்தாய்.
அவன் உண்டான். நான் போனேன்.
வீடு இடிந்தது. நாய் குரைக்கிறது.
புல் வளரும். வாள் வெட்டும்.

மேலேயுள்ள உதாரணங்களில் இராமன், அவன், வீடு, புல், நீ, நான், நாய், வாள் என்ற பெயர்களைப்பற்றி என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றன? ஒரு பெயரைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கின்றதென்பதைக் குறிக்குஞ் சொல் வினைச்சொல்.

நான் சிறியன். சோறு உண்டு. காசு இல்லை. பணம் வேண்டும். அவர் யார்? இது பெரிது. அவை நெடிய. படித்தவன் பெரியன். இவ்வசனங்களில் இரண்டாஞ் சொற்கள் வினைச்சொற்கள்.

### அப்பியாசம்.

1. நேற்று வாசித்த பாடத்தின் 1-ம் பந்தியிலுள்ள வினைச் சொற்களை எழுதுக. 2. பின்வரும் வசனங்களிலுள்ள பெயர்களைக் கூறுக—நான் படித்தேன். அவன் ஒருபடி பால் குடித்தான். பொன்னன் போகிறான். நீ போனாயா? கல் உடைந்தது. அணில் பழம் தின்னும். 3. மேற்காட்டிய வசனங்களிலுள்ள வினைகளைக் கூறுக. 4. இருபது வினைச்சொற்கள் கூறுக. 5. பெயர்ச்சொற்களோடு வினைச்சொற்களைச் சேர்த்துப் பன்னிரண்டு வசனமெழுதுக. 6. பின் வரும் பொருட்களின் நிறத்தை 'இலை பச்சை' என்பதுபோல வசனமாகச் சொல்லுக:—நாவற்பழம், எலுமிச்சம் பழம், மல்லிகைப்பூ, முருக்கம்பூ, புல். 7. பின்வரும் பொருட்களின் உருசியை 'சர்க்கரை இனிப்பு' என்பதுபோல் வாக்கியத்தில் எழுதுக:—பாகற்காய், உப்பு, பாக்கு, மிளகு, மிளகாய்.

## ச. வாக்கியம். SENTENCE.

| | |
|---|---|
| நான் நடந்தேன். | நீ தா. |
| நான் படித்தேன். | அவன் நின்றான். |
| நீ வந்தாய். | நரி ஊளையிடும். |
| பசு மேய்கின்றது | வந்தேன். |

மேலே சொல்லப்பட்டன வாக்கியங்கள். வாக்கியம் என்பது ஒருசொல்லாயாவது, பல சொல்லாயாவது நின்று பொருளை முடிவாய் உணர்த்துவது. வாக்கியம் வசனம் என்றும் சொல்லப்படும்.

ஒரு சொல்லாலான வசனம்:—இரு. பல சொல்லா லான வசனம்:—நீ செய். பசு பால் சுரக்கும்.

இவ்வசனங்களிலுள்ள நான், நீ, பசு முதலிய பெய ர்ச்சொற்கள் எழுவாய் எனப்படும். கடைசிச் சொற்க ளாகிய வினைச்சொற்கள் பயனிலை. ஒவ்வொரு வாக்கிய மும் எழுவாயும் பயனிலையும் உடையதாயிருத்தல்வேண் டும்.

'நான் படித்தேன்' என்பதற்குப் பதிலாகப் 'படித்தேன்' என்றும் சொல்லுவோம். இதில் தோன்றாதிருக்கும் நான் என்ற எழுவாய் தோன்றா எழுவாய் எனப்படும்.

ஒரு வாக்கியத்தின் எழுவாயை அறிதற்கு முதல் அதன் பயனிலையை அறிந்து அப்பயனிலையுடன் யார், எது என்ற சொற்களில் ஒன்றைச் சேர்த்து வினவுக. வரும் விடையே எழுவாயாகும்.

மாடு ஓடினது. இவ்வசனத்தில் 'ஓடினது' என்னும் வினைச்சொல் பயனிலை. எது ஓடினது என்ற கேள்விக்கு விடையாய் வரும் 'மாடு' எழுவாய் ஆகும்.

| வாக்கியம். | எழுவாய். | பயனிலை. |
|---|---|---|
| அவன் யார்? | அவன் | யார் |
| பணம் இல்லை. | பணம் | இல்லை |
| சோறு வேண்டும். | சோறு | வேண்டும் |
| நீர் வற்றினது. | நீர் | வற்றினது |
| இது மரம். | இது | மரம் |
| அவன் எங்கே? | அவன் | எங்கே |
| இருகண்கள் உண்டு. | இருகண்கள் | உண்டு |
| நேற்றுப்போனேன். | நான் } தோன்றா எழுவாய். | போனேன் |
| நாளைக்கு வா. | நீ } தோன்றா எழுவாய். | வா |

## அப்பியாசம்.

1. இன்றுபடித்த வாசிப்புப் பாடத்தின் 5 வாக்கியமும் அவற்றின் எழுவாய் பயனிலையும் எழுதுக.

2. பின்வரும் பொருட்களின் வடிவத்தைப் 'பந்து உருண்டை' என்பதுபோல, எழுவாய் பயனிலை அமைத்து வாக்கியமாக எழுதுக:—குடில், தூண், தட்டம், வில்லு.

3. நூறு சதம் ஒரு ரூபா' என்பதுபோலப் பின்வரும் அளவைகள் இவ்வளவென வாக்கியத்தில் எழுதுக:—அறுபது நிமிஷம், ஏழு நாள், பன்னிரண்டு மாசம், பன்னிரண்டு அங்குலம்.

4. பின்வரும் கருவிகள் செய்யும் வேலையை 'வாள் அரியும்' என்பதுபோல வாக்கியத்தில் எழுதுக:—உளி, சீவுளி, கத்தி, உழவாரம், பாரை, துறப்பணம், விளக்குமாறு, கோடரி, மண்வெட்டி, கலப்பை, ஊசி, சம்மட்டி.

5. பின்வருவனவற்றின் எழுவாய், பயனிலைகளைக் கூறுக:—வா. படித்தேன். ஓடினது. செய்தான். வந்தார்கள். நடந்தீர்களா? மரம் விழுந்தது. கழிமுறிந்தது. கோபம் பொல்லாதது. ஏற்பது இகழ்ச்சி.

6. 'நான் பாடம் வாசிப்பேன்' என்பது 'நான் பாடம் வாசியேன்' என எதிர்மறையானவாறு பின்வரும் வாக்கியங்களிலுள்ள பயனிலையை மாற்றி எழுதுக:—அவன் நாளை வீட்டுக்குப் போவான். அந்தச் சிறப்புக்களை நன்றாய்ப்பாரும். அவன் விசேஷ கருமங்களைச் செய்வானாக. நீங்கள் அதை எடுப்பீர்களாக. நான் நேற்றுக் கடிதம் எழுதினேன். நீ நன்றாய்ப் பேசுவாய்.

---

## ரு. செயப்படுபொருள். OBJECT.

| | |
|---|---|
| நான் அவனை அடித்தேன். | நான் இருக்கிறேன். |
| மாடு வண்டியை இழுத்தது. | மழை பெய்கிறது. |
| அவன் குடத்தை வனைந்தான். | இராமன் நடந்தான். |

இவ்வாக்கியங்களிலுள்ள எழுவாய்கள் என்ன? பயனிலைகள் என்ன? அடித்தேன் என்னும் பயனிலைக்கும் இருக்கிறேன் என்னும் பயனிலைக்கும் உள்ள பேதம் என்ன? அடித்தேன், வனைந்தான், இழுத்தது என்னும் பயனிலைகள் முறையே அவனை, வண்டியை, குடத்தை என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றன. பயனிலை உணர்த்தும் செயலைச்செய்த பொருளினது பெயர் எழுவாய். செயலை அடைந்த பொருளினது பெயர் செயப்படுபொருள். செயப்படுபொருள் 'ஐ' பெற்றிருப்பதைப் பார்க்க. சில சொற்களில் 'ஐ' மறைந்து நிற்கும்.

உதாரணம்:—இராமன் பால் கறந்தான்.
மாடு வண்டி இழுத்தது.

ஒரு வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளை அறிந்தபின் பயனிலையுடன் யாரை, எதை என்ற சொற்களைச் சேர்த்து வினவுக. வரும் விடையே செயப்படுபொருளாகும்.

பின்வரும் சொற்கள் செயப்படுபொருளாகும் பொழுது நிகழும் மாற்றத்தைக் கவனிக்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கால் | + ஐ = | காலை | யான் | + ஐ = | என்னை |
| தலை | + ஐ = | தலையை | யாம் | + ஐ = | எம்மை |
| நாடு | + ஐ = | நாட்டை | நாம் | + ஐ = | நம்மை |
| சோறு | + ஐ = | சோற்றை | தாம் | + ஐ = | தம்மை |
| பொன் | + ஐ = | பொன்னை | தான் | + ஐ = | தன்னை |
| மரம் | + ஐ = | மரத்தை | நீ | + ஐ = | நின்னை / உன்னை |
| | | | நீர் | + ஐ = | நும்மை / உம்மை |

| வாக்கியம். | எழுவாய். | பயனிலை. | செயப்படுபொருள். |
|---|---|---|---|
| குயவன் குடத்தை வனைந்தான். | குயவன் | வனைந்தான் | குடத்தை |
| நான் வேலையைச் செய்தேன். | நான் | செய்தேன் | வேலையை |
| தச்சன் மரத்தை வெட்டினான். | தச்சன் | வெட்டினான் | மரத்தை |
| இயல்வது கரவேல். | நீ | கரவேல் | இயல்வது |
| நான் அங்கே போனேன். | நான் | போனேன் | ——— |
| அவன் வீட்டிலிருக்கிறான். | அவன் | இருக்கிறான் | ——— |
| இராமன் சோற்றை உண்டானா? | இராமன் | உண்டானா | சோற்றை |

## அப்பியாசம்.

1. இன்று படித்த வாசிப்புப் பாடத்திலே செயப்படுபொருளுள்ள 5 வாக்கியம் வாசிக்க.

2. தா, படி, வை, செய், அடி, வெட்டு என்ற வினைச்சொற்களின் எழுவாய் என்ன? இவைகளுடன் செயப்படுபொருள் சேர்த்து வாக்கியம் எழுதுக.

3. படித்தான், தூக்கின, கண்டேன், செய்யும் என்ற சொற்களின் எழுவாய்கள் என்ன? அவைகளுடன் செயப்படுபொருள் சேர்த்து வாக்கியம் எழுதுக.

4. பின்வருஞ் சொற்களைச் செயப்படுபொருளாக்கி வசனம் எழுதுக:—வேலை, பலா, கல், அரிசி, பணட்டு, காகம், நீ, யான், நாம், யாம்.

5. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறுக:—பெட்டியைத் திற. நான் படம் வரைந்தேன். நாய் குட்டி ஈனும். கோழி பத்து முட்டை இட்டது. பட்சிகள் கூடு கட்டின. பூனை எலி பிடிக்குமா? நான் மரத்தில் ஏறினேன். அவன் நன்றாய் நடப்பான். அது அங்கே இல்லை. நான் நேற்றுக் கோயிலுக்குப் போனேன்.

6. குறிப்பிட்ட இடங்களில் வேண்டிய செயப்படுபொருளை அமைத்து வாக்கியத்தை முடிக்க:—மாடுகள்——தின்னும். ——படித்தேன். தம்பி——ச் செய்தான். ஊனன்——இழந்தான். கோடரி——தறிக்கும்.

7. 'எனது சகோதரி ஒரு மகனைப் பெற்றாள்.' என்பது 'எனது சகோதரிக்கு ஒரு மகன் பிறந்தான்.' என்றாற்போலப் பின்வரும் வாக்கியங்களிலுள்ள செயப்படுபொருளை எழுவாயாக்கி எழுதுக. உபாத்தியாயர் ஓர் வெகுமதியைப் பெற்றார். கிராமவாசிகள் பல சகாயங்களை அடைந்தார்கள். நீ அடுத்தவருஷம் உயர்ந்த சம்பளம் பெறுவாய். யாவரும் பெரியோரைப் போற்றுகின்றனர்.

---

## ௩. திணை. CLASS.

கந்தன், மாடு, பூனை, மரம், மனிதர், சதாசிவன் என்ற சொற்கள் யாவும் பெயர்ச்சொற்கள். இவை இரு வகைச் சாதிகளை உணர்த்துஞ் சொற்களாக இருக்கின்றன. இவை உயர்ந்த சாதி என்றும், உயர்வல்லாத சாதி என்றும் சொல்லப்படும். சாதி என்பது திணை.

பெயரின் இருதிணைகளாவன:—உயர்திணை, அஃறிணை.

1. உயர்திணை என்பது உயர்ந்த சாதி. மனிதர், தேவர் உயர்ந்த சாதியாதலின் அவர்களின் பெயர் உயர்திணையாம்.

உதாரணம்:—இராமன், மகள், சிவன்.

2. அஃறிணை: உயர்திணை அல்லாத பெயர்கள் அஃறிணை என்று சொல்லப்படும்.

உதாரணம்:—வீடு, குதிரை, புத்தகம்.

மூடவன், செவிடி, குருடி என்னும் பெயர்ச்சொற்கள் மனிதருக்கும் மிருகங்களுக்கும் பொதுவாக வழங்கப்படுதலால் அவைகள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாயின. (இவை உயர்திணையோ அஃறிணையோ என்பதை இடம் நோக்கி நிச்சயிக்க.) இவ்வாறே செவியிலி, தந்தை, தாய், நான், நாம், யார், யாம், நீ, நீர், தான், தாம், ஊமை, சந்திரன், சூரியன், பேடி என்னும் பெயர்களும் இருதிணைப் பொதுப்பெயராயிருக்கின்றன.

## அப்பியாசம்.

1. இற்றை வாசிப்புப் பாடத்திலுள்ள பெயர்ச் சொற்களும் அவற்றின் திணைகளும் இன்னவென வரிசையாக எழுதுக.

2. பின்வரும் பெயர்களின் திணைகளைக் கூறுக:—கடவுள், பிள்ளையார், மரம், மகன், புல்லு, பட்சம், வெண்மை, நிறை, தென்னைகள், இருவர், நடை.

3. பின்வரும் பெயர் வினைகளின் திணைகளைக் கூறுக:—சந்திரன் உதித்தான். சிலந்தி ஓடினது. ஊமை வந்தான். பேடி நடந்தான். சூரியன் உதித்தது. இரண்டு வந்தன. சாத்தி வந்தது. குரங்கு 'நான் செய்யவில்லை' என்று சொன்னது.

4. பின்வரும் எழுவாய்களுடன் பயனிலைகளைச் சேர்த்துச் சொல்லுக:—தம்பி, அக்காள், ஓலை, பட்சிகள்.

## எ. பால். GENDER.

இராமன் விளையாடுகிறான். காகம் கத்துகிறது.
சிறுவர்கள் பாடுகிறார்கள். காகம் கத்துகின்றன.
பொன்னி சமைக்கிறாள். காகங்கள் கத்துகின்றன.

இவற்றிலுள்ள இராமன், சிறுவர்கள், பொன்னி என்னும் உயர்திணைச் சொற்கள் மூன்று பகுதியனவாயும் காகம், காகங்கள் என்னும் அஃறிணைச் சொற்கள் இரண்டுபகுதியனவாயும் இருக்கின்றன.

பால் என்பதன் கருத்து பகுதி. ஆகவே உயர்திணை மூன்று பாலாகவும், அஃறிணை இரண்டு பாலாகவும் பகுக்கப்பட்டுப் பெயர்கள் ஐந்து பால்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

1. ஆண்பால்: ஆண்பாற் பெயர்கள் அன், ஆன் எனமுடியும்.

உதாரணம்:—கந்தன். வண்ணான்.

இவ்வாறு முடியாமலும் சில ஆண்பாற் பெயர்கள் உண்டு.

உதாரணம்:—நம்பி. தோன்றல்.

2. பெண்பால்: பெண்பாற் பெயர்கள் அள், ஆள், இ என முடியும்.

உதாரணம்:—அவள், குழலாள், வண்ணாத்தி.

இவ்வாறு முடியாமலும் சில பெண்பாற் பெயர்கள் உள.

உதாரணம்:—அன்னை. [illegible] மனை பெண்டு.

3. ஒருவருக்கு அதிகமானோரைக் குறிக்கும் உயர் திணைச்சொற்கள் பலர்பாற் சொற்கள் எனப்படும். அவை அர், ஆர், மார், கள், ர் என முடியும்.

உதாரணம்:—அவர். கோவியர். வண்ணார். தாய்மார். ஆடவர்கள். பெண்கள். அரசர்கள். மனிதர்கள். பிறர்.

4. ஆண்பாற் சொற்களில் ஆண்பாலை உணர்த்துவதை நீக்கி அள், ஆள், இ என்பவற்றைச் சேர்ப்பதால் அவற்றின் பெண்பாற் சொற்கள் உண்டாகும்.

உதாரணம்:—அவன் அவள்
வேலைக்காரன் வேலைக்காரி
பார்ப்பான் பார்ப்பனி

5. வெவ்வேறு சொற்களாலும் ஆண்பால் பெண்பால் குறிக்கப்படும்.

உதாரணம்:—ஐயன். அம்மாள், அம்மை.
அண்ணன். அக்காள்.

| ஆண்பால். | பெண்பால். | பலர்பால். |
|---|---|---|
| அவன் | அவள் | அவர் |
| வண்ணான் | வண்ணாத்தி | வண்ணார், வண்ணாத்திகள் |
| கொல்லன் | கொல்லிச்சி | கொல்லர், கொல்லிச்சிகள் |
| கள்வன் | கள்ளி | கள்வர், கள்ளிகள் |
| பார்ப்பான் | பார்ப்பனி | பார்ப்பார், பார்ப்பனிகள் |
| உபாத்தியாயன் | உபாத்தியாயினி | உபாத்தியாயர், உபாத்தியாயினிகள் |
| ஒருவன் | ஒருத்தி | |
| | | இருவர் |
| தம்பி | தங்கை | தம்பிமார், தங்கைமார் |
| சிறுவன் | சிறுமி | சிறுவர்கள், சிறுமிகள் |
| தமயன் | தமக்கை | தமயன்மார், தமக்கைமார் |
| நம்பி | நங்கை | நம்பியர், நங்கையர், நங்கைகள் |
| அரசன் | அரசி | அரசர்கள், அரசிகள் |

## உயர்திணைப் பெயர்கள்.

இராமன் வந்தான்; அவன் கதை சொன்னான்.
பொன்னி போகிறாள்; அவள் நல்லாய்ப் படிப்பாள்.

## அஃறிணைப் பெயர்கள்.

கண்ணாடி பெரிது; அது உடைந்தது.
கடதாசிகள் சிறியன; அவை கிழிந்தன.
பசு வயலுட் போனது; அது பயிரை அழித்தது.

பசுக்கள் வீட்டுட் புகுந்தன; அவை புழுங்கலைத் தின்றன.

எருது பெரிது; அது கெதியாய் ஓடுகின்றது.
எருது பெரியன; அவை கெதியாய் ஓடுகின்றன.
எருதுகள் பெரியன; அவை பாரம் இழுக்கின்றன.

அஃறிணைப்பெயர்களுள் சிலவற்றிற்கு ஆண் பெண் என்ற பகுப்பு இருந்தாலும் அவை அப்பகுப்பற்ற கண்ணாடி, கடதாசி முதலிய பொருட்கள் போல வழங்கப்படுகின்றன. இதனால் அஃறிணைப் பெயர்களுக்கு ஆண்பால் பெண்பால் என்ற பகுப்பு இலக்கணத்திற் கூறாது ஒன்றன்பால் பலவின்பால் என்ற எண்பகுப்புக் கூறப்பட்டன. ஒன்றன்பாற்பெயர்கள் து ஈறாகவும், பலவின்பாற்பெயர்கள் வை, கள் ஈறாகவும் வரும்.

உதாரணம்:—ஒன்றன்பால்: அது, இது.
பலவின்பால்: அவை, பசுக்கள்.

### அப்பியாசம்.

1. இற்றை வாசிப்புப்பாட முதலிருபந்திகளிலுள்ள பெயர்ச் சொற்களையும் அவற்றின் பால்களையும் எழுதுக.

2. பின்வருவனவற்றிற்குப் பெண்பாற் சொற்கள் கூறுக:—தச்சன், அரசன், பணக்காரன், இடையன், நாயகன், தம்பி, மைத்துனன், செல்வன், தலைவன்.

3. பின்வருவனவற்றிற்கு ஆண்பாற் சொற்கள் கூறுக:—பொன்னி, தேவி, நங்கை, அக்காள், ஆய்ச்சி, தோழி, மனையாட்டி, வாணத்தி, குறத்தி, கூனி.

4. பின்வரும் பெயர்களுக்குரிய ஆண்பால் பெண்பாலைக் கூறுக:—பெற்றோர், உபாத்தியாயர், ஆடவர், மனுஷர், புலவர், மக்கள், அவர்.

5. பின்வரும் வாக்கியங்களிலுள்ள ஆண்பாற் சொற்களைப் பெண்பாற் சொற்களாக மாற்றி எழுதுக:—அவன் மாசிமாதத்தினன். பொன்னன் கார்த்திகை மாதத்தினன். அரசன் பெரிய செல்வத்தினன், தம்பி மதுரமொழியினன். கூலிக்காரன் தாழ்மையுள்ளான்.

6. ஒன்றுக்கும் பத்துக்கும் இடையிலுள்ள எண்களினின்று வரும் பலர்பாற் பெயர்கள் கூறுக.

7. ஒன்று என்னும் எண்ணால் உண்டாகக்கூடிய உயர்திணைப்பெயர்களை உண்டாக்குக. அவற்றின் பால்களைக் கூறுக.

8. பின்வரும் பிராணிகளின் ஒலிகளைத் 'தவளை கத்தினது', 'தவளை கத்தின', 'தவளைகள் கத்தின' என்பனபோல வாக்கியத்தில் எழுதுக:—வண்டுகள், ஆந்தை, பூனை, பாம்புகள், குயில்கள், சிங்கம், குதிரை, கழுதை, மாடுகள், கோழி.

9. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துக:—குதிரைகள் போனது. மாடுகள் போச்சுது. அவர்கள் அங்கே வந்தவை.

---

## அ. எண். NUMBER.

குயவன், தேவன், அது என்பன ஒவ்வொரு பொருளின் பெயர். ஒரு பொருளினது பெயர் ஒருமை. குயவர், தேவர், அவை என்பன பலபொருள்களின் பெயர்கள். பல பொருளினது பெயர் பன்மை. ஆகவே எண் ஒருமை, பன்மை என இருவகைப்படும். இருதிணைக்கும் இப்பகுப்பு உண்டு. அஃறிணைக்குரிய ஒன்றன்பால் பலவின்பால் என்ற பகுப்பு எண் பகுப்பே. அஃறிணைப்பெயர் ஒன்றைக்குறிப்பின் அது ஒன்றன்பால் எனப்படும்.

உதாரணம்:—அது. இது.

அஃறிணைப் பெயர் பலவற்றைக் குறிப்பின் அது பலவின்பால் எனப்படும்.

உதாரணம்:—அவை, இவை, காகங்கள்.

'மாடுகள் வந்தன' என்பதும் 'மாடு வந்தன' என்பதும் வழக்கிலுண்டு. மாடு வந்தது, மாடு வந்தன என்னும் வசனங்களில் மாடு என்பது முறையே ஒன்றன்பாலாயும் (ஒருமை), பலவின்பாலாயும் (பன்மை) இருக்கின்றது. ஒன்றன்பாலோ, பலவின்பாலோ என்று பகுத்தறியக் கூடாத பெயர்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

---

## அ. எண். (தொடர்பு.)

பலர்பாற் சொற்களும் பலவின்பாற் சொற்களும் பன்மைச் சொற்களாம்.

உதாரணம்:—ஆடவர், நாய்கள், எவை.

ஆண்பாற் சொற்களும் பெண்பாற் சொற்களும் ஒன்றன் பாற் சொற்களும் ஒருமைச் சொற்களாம்.

உதாரணம்:—மனிதன், மனுஷி, அது.

| ஒருமை. | பன்மை. | ஒருமை. | பன்மை. |
|---|---|---|---|
| மரம் | மரம் / மரங்கள் | நாயன் | நாயன்மார் |
| தூண் | தூண் / தூண்கள் | தகப்பன் | தகப்பன்மார் |
| கல் | கல் / கற்கள் | தமயன் | தமயன்மார் |
| புல் | புல் / புற்கள் | தாய் | தாய்மார் |
| வில் | வில் / விற்கள் | நான் | நாம் |
| | | நீ | நீர் |
| சிநேகிதன் | சிநேகிதர் | அது | அவை |
| சிநேகிதை | சிநேகிதைகள் | இது | இவை |
| தம்பி | தம்பிமார் | யான் | யாம் |

குறிப்பு.

1. ஒருமுடிபால் பன்மை குறிக்கவேண்டிய இடத்தில் இருமுடிபுகளால் பன்மை குறிக்கவேண்டியதில்லை.

உதாரணம்:—அவர்கள், அவைகள், தம்பிமார்கள் என்பவற்றிற்குப் பதிலாக அவர், அவை, தம்பிமார் என்று சொல்லுதல் போதியதாகும்.

2. சில உயர்திணைப் பெயர்கள் மரியாதைப்பன்மை கொண்டு முடிவதுண்டு.

உதாரணம்:—

சிவன்.........சிவனார் அவன்.........அவர்

நாயன்.........நாயனார் நீ...............நீர்

ஒரு மனுஷனை அவர், நீர், நீங்கள் எனக்குறிப்பது மரியாதைபற்றியே.

### அப்பியாசம்.

1. இற்றைவாசிப்புப் பாடக்கடை 2 பந்தியிலுமுள்ள பெயர்ச்சொற்களும் அவற்றின் எண்களும் எழுதுக.

2. திணை, பால் எண் கூறுக:—சிநேகிதன், கல், கை, புத்தகம், சூரியன், தம்பி, நான், அது.

3. பன்மை கூறுக:—பல், நோய், அறை, தம்பி, பிராமணன், பிணம், இது, மனிதன், அவர், அது, கோழி, அவன்.

4. ஒருமை கூறுக:—அவர், அவை, விற்கள், மூட்கள், நகங்கள், பற்கள்.

5. பின்வரும் சொற்பிழைகளைத் திருத்துக:—அவன்கள். இருவன். அதுகள். இதுகள். வந்தான்கள். குதிரைகள் போச்சுது. அவன்கள் செய்தார்கள். அவளவை எங்கே? அவரவை சொன்னது கேளாயினம்.

---

## கூ. இடம். PERSON.

நான், நீ, அவன் என்று சொல்லுமிடத்து, இச்சொற்கள் மூன்றிடத்திலுள்ளவர்களைக் குறிக்கின்றன. பெயரின் இடம் மூன்றுவகைப்படும். அவை:—தன்மை, முன்னிலை, படர்க்கை.

பேசுகிறபொருள் தன்மை இடத்து உள்ளது. தன்மை என்பது தன்னுடைய இடம்.

உதாரணம்:—நான், நாம்.

பேசும் பொருளுக்கு எதிர்முகமாய் உள்ள பொருள் முன்னிலை இடத்து உள்ளது.

உதாரணம்:—நீ, நீர்.

மற்றையபெயர்கள் யாவும் படர்க்கை இடத்து உள்ளன. படர்க்கை என்பது தன்மை முன்னிலை இரண்டையும் விட்டு அப்பாற் செல்வது.

உதாரணம்:—கந்தன், ஒருவன், மரம், தான்,

| இடம். | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| தன்மை ... | நான் ... | நாம், நாங்கள். |
| | யான் ... | யாம், யாங்கள். |
| | என்னை ... | எம்மை, எங்களை. |
| முன்னிலை ... | நீ ... | நீர், நீங்கள். |
| | உன்னை ... | உங்களை. |
| படர்க்கை ... | அவன் ... | அவர், அவர்கள். |
| | அவள் ... | |
| | அது ... | அவை, அவைகள். |
| | தான் ... | தாம், தாங்கள். |

குறிப்பு. தாழ்ந்தவர், ஒத்தவர், உயர்ந்தவரோடு ஒருவன் பேசும்பொழுது அவர்களை வெவ்வேறுவிதமாக விளித்துப் பேசுவது வழக்கம்.

| | தாழ்ந்தவரை. | ஒத்தவரை. | உயர்ந்தவரை. |
|---|---|---|---|
| முன்னிலை | நீ ... | நீர் ... | நீங்கள் |
| | உன்னை ... | உம்மை ... | உங்களை |
| படர்க்கை | அவன் ... | அவர் ... | அவர்கள் |

## அப்பியாசம்.

1. ஒருவாசிப்புப்பாடத்திலுள்ள தன்மை, முன்னிலை, படர்க்கைப்பெயர்களை வரிசையாக எழுதுக.

2. பின்வருவனவற்றிற்கு இடம் கூறுக:—நீங்கள், குமாரர், நான், அவர், அது, யாது, சுப்பன், நானா, இவனா, அவளா, விளையாட்டு, காவடி, என்னை, எங்களை, உங்களை.

3. நான், நாம், நீங்கள், அவர்கள், அவன், அவர் என்னுஞ் சொற்களை அமைத்து வாக்கியம் எழுதுக.

4. நீ, நீர், உன்னை, உங்களை, என்னை என்பவற்றை அமைத்துப் பன்னிரண்டு வாக்கியம் எழுதுக.

5. நீ உன் வகுப்புத் தோழனையும், உபாத்தியாயரையும், வேலைக்காரனையும் விளித்துப் பேசும்பொழுது என்ன என்ன சொற்களைப் பிரயோகிப்பாய்?

---

## ௧௦. வேற்றுமை.
## DECLENSION OF NOUNS.

மகன் வந்தான்.
நான் மகனை அடித்தேன்.
அது மகனாற் செய்யப்பட்டது.
இதனை மகனுக்குக் கொடு.

மகனிலிருந்து பெறு.
மகனது புத்தகம்.
மகனில் விருப்புவை.
மகனே வா.

மேலேயுள்ள வசனங்களில் மகன் என்ற ஒருசொல்லு சொல்லளவிலும் பொருளளவிலும் வேறுபட்டு வருவதைக் கவனிக்க. ஒரு பெயர்ச்சொல் சொல்லினும் பொருளினும் வேறுபடுதல் வேற்றுமை எனப்படும். வேற்றுமையின் உருவத்தைக் குறிக்குஞ்சொல் வேற்றுமை உருபு எனப்படும். வேற்றுமை எண்வகைப்படும். அவையாவன:—முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நாலாம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம்வேற்றுமை, எட்டாம் வேற்றுமை.

| | உருபு. | ஒருமை. | | | பன்மை. |
|---|---|---|---|---|---|
| 1-ம் வேற்றுமை | —— | மகன் | | மகன் | மக்கள் |
| 2-ம் வேற்றுமை | ஐ | மகன் | ஐ | மகனை | மக்களை |
| 3-ம் வேற்றுமை | ஆல் | மகன் | ஆல் | மகனால் | மக்களால் |
| 4-ம் வேற்றுமை | கு | மகன் | கு | மகனுக்கு | மக்களுக்கு |
| 5-ம் வேற்றுமை | இன் } நின்று } | மகன் | இன் | மகனின் | மக்களின் நின்று |
| 6-ம் வேற்றுமை | அது (உடைய) | மகன் | அது | மகனது | மக்களது மக்களுடைய |
| 7-ம் வேற்றுமை | இல் | மகன் | இல் | மகனில் | மக்களில் |
| 8-ம் வேற்றுமை | —— | மகன் | ஏ | மகனே | மக்களே |

| 1-ம் வேற்றுமை. | 2-ம் வேற்றுமை. | 3-ம் வேற்றுமை. | 4-ம் வேற்றுமை. |
|---|---|---|---|
| மரம் | மரத்தை | மரத்தால் | மரத்துக்கு |
| மாடு | மாட்டை | மாட்டால் | மாட்டுக்கு |
| தலை | தலையை | தலையால் | தலைக்கு |
| கண் | கண்ணை | கண்ணால் | கண்ணுக்கு |
| பசு | பசுவை | பசுவால் | பசுவுக்கு |

| 5-ம் வேற்றுமை. | 6-ம் வேற்றுமை. | 7-ம் வேற்றுமை. | 8-ம் வேற்றுமை. |
|---|---|---|---|
| மரத்தினின்று | மரத்தினது | மரத்தில் | மரமே |
| மாட்டினின்று | மாட்டினது | மாட்டில் | மாடே |
| தலையினின்று | தலையினது | தலையில் | தலையே |
| கண்ணினின்று | கண்ணினது | கண்ணில் | கண்ணே |
| பசுவினின்று | பசுவினது | பசுவில் | பசுவே |

| | 1-ம் வேற்றுமை | 2-ம் வேற்றுமை | 3-ம் வேற்றுமை | 4-ம் வேற்றுமை |
|---|---|---|---|---|
| ஒருமை. | யான் | என்னை | என்னால் | எனக்கு |
| | நீ | உன்னை | உன்னால் | உனக்கு |
| | அது | அதனை | அதனால் | அதற்கு |
| பன்மை. | யாம் | எம்மை | எம்மால் | எமக்கு |
| | நாம் | நம்மை | நம்மால் | நமக்கு |
| | நீர் | உம்மை | உம்மால் | உமக்கு |
| | நீங்கள் | உங்களை | உங்களால் | உங்களுக்கு |
| | அவை | அவற்றை | அவற்றால் | அவற்றிற்கு |

| | 5-ம் வேற்றுமை | 6-ம் வேற்றுமை | 7-ம் வேற்றுமை | 8-ம் வேற்றுமை |
|---|---|---|---|---|
| ஒருமை. | என்னின் | எனது | என்னில் | ——— |
| | உன்னின் | உனது | உன்னில் | ——— |
| | அதனின் | அதனது | அதனில் | ——— |
| பன்மை. | எம்மின் | எம்முடைய | எம்மில் | ——— |
| | நம்மின் | நம்முடைய | நம்மில் | ——— |
| | உம்மின் | உம்முடைய | உம்மில் | ——— |
| | உங்களின் | உங்களுடைய | உங்களில் | ——— |
| | அவற்றின் | அவற்றினது | அவற்றில் | ——— |

## அப்பியாசம்.

1. இற்றை வாசிப்புப்பாடத்திலுள்ள பெயர்ச்சொற்கள் பெற்றுள்ள வேற்றுமைகளை 1-ம், 2-ம், 3-ம் வேற்றுமை என்ற வரிசைப்படி எழுதுக.

2. பின்வரும் பெயர்ச்சொற்கள் எட்டுவகையாகவும் வேற்றுமைப்பட வசனம் எழுதுக:—விளக்கு, கண்மணி, பூனை, தச்சன், கன்று.

3 பெயர்களை வேற்றுமைப்படுத்தும் உருபுகள் யாவை?

4. பின்வரும் வசனங்களிலுள்ள பெயர்ச்சொற்கள் எவ்வெவ் வேற்றுமைகளை அடைந்திருக்கின்றன:—இராமன் மாட்டை அடித்தான். இராமன் மாட்டைத் தடியால் அடித்தான். இராமன் என்னுடைய மாட்டைத் தடியால் அடித்தான். அது வீட்டினின்றும் போய் வயலில் புல்லை மேய்ந்தது. தம்பீ அம்மாட்டைத் துரத்து.

5. பின்வரும் வாக்கியங்களிலுள்ள செயப்படுபொருளை எழுவாயாக மாற்றி எழுதுக: 1. நீர் அவனைக் கூப்பிட்டீர். 2. யான் புத்தகத்தை வாங்கினேன். 3. அவர் வேடிக்கை பார்த்தார். 4. நாம் கணக்கைப் பரிசோதித்தோம். 5. அவள் சமையலை முடித்தாள். 6. அரசன் குற்றவாளியைச் சிறையிலிட்டான். 7. நீங்கள் சொல்லிய பொருளை யாம் உணர்ந்தோம். 8. நீர் செய்யுளை நன்றாய்த் தெரிந்து கொண்டீரா?

6. 'கோவிந்தன் மற்றை எல்லாரினுஞ் சோம்பேறி' என்பது 'ஒருவரும் கோவிந்தனளவு சோம்பேறியல்லர்' என்றாற்போலப் பின்வரும் வாக்கியங்களைப் பொருள்மாறாவண்ணம் மாற்றி எழுதுக: 1. கொழும்பு இலங்கையிலுள்ள எல்லா நகரங்களினும் விசேஷமானது. 2. இராமசாமி வகுப்புப்பிள்ளைகள் யாவரினும் பலசாலி. 3. எக்கல்வியினும் சாஸ்திரம் முதன்மையானது. 4. பொய் சொல்லல் மற்றெல்லாப் பாவத்தினுங் கொடியது. 5. கல்வியே எல்லாப் பொருள்களைக் காட்டினும் உயர்ந்தது. 6. சத்தியமே பிற எல்லாவற்றினும் நன்மைபயப்பதாம்.

## கக. முக்காலவினை

## THE THREE TENSES

| வினை அடி. | இறந்த காலம். | நிகழ் காலம். | எதிர் காலம். |
|---|---|---|---|
| நட | நடந்தேன். | நடக்கிறேன் | நடப்பேன் |
| வா | வந்தேன் | வருகிறேன் | வருவேன் |
| மடி | மடித்தேன் | மடிக்கிறேன் | மடிப்பேன் |
| கூவு | கூவினேன் | கூவுகிறேன் | கூவுவேன் |
| வே | வெந்தேன் | வேகிறேன் | வேவேன் |
| வை | வைத்தேன். | வைக்கிறேன் | வைப்பேன் |
| நொ | நொந்தேன் | நோகிறேன் | நோவேன் |
| போ | போனேன். | போகிறேன் | போவேன் |
| உண் | உண்டேன் | உண்கிறேன் | உண்பேன் |
| தின் | தின்றேன் | தின்கிறேன் | தின்பேன் |
| பார் | பார்த்தேன் | பார்க்கிறேன் | பார்ப்பேன் |
| செல் | சென்றேன் | செல்கிறேன் | செல்வேன் |
| வாழ் | வாழ்ந்தேன் | வாழ்கின்றேன் | வாழ்வேன் |
| கேள் | கேட்டேன் | கேட்கிறேன் | கேட்பேன் |
| கா | காத்தேன் | காக்கிறேன் | காப்பேன் |
| சா | செத்தேன் | சாகிறேன் | சாவேன் |
| தா | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| ஆ | ஆனேன் | ஆகிறேன் | ஆவேன் |
| சொல் | சொன்னேன் | சொல்கிறேன் | சொல்வேன் |

### அப்பியாசம்.

1. நேற்றுப் படித்த வாசிப்புப் பாடத்திலுள்ள வினைச் சொற்களை முக்கால வரிசைப்படி எழுதுக.

2. பின்வரும் வினைச்சொற்களின் காலத்தைக் கூறுக:— செத்தேன், வந்தேன், வாழ்த்துவேன், கேட்பேன், நிற்பேன், தேடுகிறேன், கூவினேன், வருகின்றன, பாடாநின்றேன், புகுவான்.

3. மேற்கூறப்பட்ட வினைச்சொற்களின் வினை அடிகளைக் கூறுக.

4. பின்வரும் வினையடிகளினின்றும் பிறக்கிற முக்கால வினைச்சொற்களையுங் கூறுக:—தேடு, கூடு, காட்டு, கூட்டு, மூடு, நட, செய், பெய், போ, அனுப்பு, வளர், வாழ், தாழ், நடு, வை, நொ, கொல், உண், உருள்.

5. பின்வரும் வினைச் சொற்களின் வினையடிகளினின்று பிறக்கிற இறந்தகால வினைச்சொற்களைக் கூறுக:—உருளுவான், வில்லாநின்றான், படிப்பான், தருகிறேன், கொள்வான், ஓடுவார், இறைப்போம், ஆள்வேன், நிற்கிறான்.

6. பின்வரும் வினையடிகளினின்று பிறக்கிற எதிர்கால வினைச்சொற்களைக் கூறுக:—கொடு, அடுக்கு, ஒளி, போல், நிகர், கூறு, நேசி, உழை, அரை, அடி.

## க௨. முக்கால மூவிட வினை
## CONJUQATION OF VERBS.

| காலம். | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| இறந்த காலம். | (நான்) செய்தேன்.<br>(நீ) செய்தாய்.<br>(அவன்) செய்தான்.<br>(அவள்) செய்தாள்.<br>(அது) செய்தது. | (நாம்) செய்தோம்.<br>(நீர்) செய்தீர்.<br>(அவர்) செய்தனர்.<br>(அவை) செய்தன. |
| நிகழ் காலம். | (நான்) செய்கிறேன்.<br>(நீ) செய்கிறாய்.<br>(அவன்) செய்கிறான்.<br>(அவள்) செய்கிறாள்.<br>(அது) செய்கின்றது. | (நாம்) செய்கின்றோம்.<br>(நீர்) செய்கிறீர்.<br>(அவர்) செய்கிறார்.<br>(அவை) செய்கின்றன. |
| எதிர் காலம். | (நான்) செய்வேன்.<br>(நீ) செய்வாய்.<br>(அவன்) செய்வான்.<br>(அவள்) செய்வாள்.<br>(அது) செய்யும். | (நாம்) செய்வோம்.<br>(நீர்) செய்வீர்.<br>(அவர்) செய்வார்.<br>(அவை) செய்யும். |

## அப்பியாசம்.

1. இற்றை வாசிப்புப்பாடத்திலுள்ள முவிடவினைகளையும் வெவ்வேறாக எழுதுக.

2. பின்வருஞ் சொற்களுடன் 'செய்' என்னும் வினையடியினின்றும் பிறக்கிற வினைச்சொற்களைச் சேர்த்து எழுதுக:—நான், யான், நீ, அவன், அது, அவை, அவர், நீர், நாம்.

3. பின்வரும் வினைச்சொற்களுக்குப் பன்மை கூறுக:—நடந்தேன், செய்தான், வந்தது, படிப்பான், உண்கிறாய்.

4. பின்வரும் வினைச்சொற்களின் திணை, பால் கூறுக:—வந்தது, ஓடுவான், போனார், தின்றன, செய்யும்.

5. பின்வரும் சொற்களின் எண், இடம் கூறுக:—செய்வான், வருகிறேன், நடந்தோம், இருந்தது, ஓடின, வந்தன, செய்தீர்.

6. பின்வரும் பன்மை வினைகளுக்கு ஒருமை வினை கூறுக:-உண்போம், செய்வார், வந்தன, செய்யும், படிப்பீர்கள், உண்டார்கள்.

7. பின்வரும் வசனங்களிலுள்ள பிழைகளைத் திருத்துக:—நேற்று அங்கே போனனான். நான் அதைக்கேட்ட நான். சோறு தின்ற நாங்கள். நீ வீட்டுக்கு வந்தீர். அவர் நாளைக்குப் போறனென்று சொன்னவர். அவன் இங்கே வந்தவன்.

---

## ௧௫. முற்றுவினை, எச்சவினை.
## FINITE VERBS, PARTICIPLES.

| | |
|---|---|
| சோமன் நடந்தான். | சோமன் நடந்து போனான். |
| சுந்தரி நடக்கிறாள். | சுந்தரி நடக்க எண்ணுகிறாள். |
| மாடு நடந்தது. | நடந்த மாடு ஓடுகின்றது. |
| பசுக்கள் மேய்ந்தன. | மேய்ந்த பசுக்கள் ஓடுகின்றன. |
| மனிதர் நடப்பார். | நடவாத மனிதர் இல்லை. |
| அவள் நல்லள். | நல்ல கந்தன். |

மேலே முதற்பிரிவின் வசனங்களிலுள்ள வினைகள் அவற்றின் பெயர்களுடன் திணை, பால், எண், இடம் என்பனவற்றில் ஒன்றி முடிகின்றன.

திணை, பால், எண், இடம் என்பவற்றைத் தெரிவித்து, பொருள் முடிவுபெற்று நிற்கும் வினைச்சொல் முற்றுவினை எனப்படும்.

இரண்டாம் பிரிவிலுள்ள வசனங்களில் கறுப்பெழுத்தில் எழுதப்பட்டிருக்கும் வினைச்சொற்கள் முற்றுவினைகளா? ஏன் முற்றுவினைகள் அல்ல? (திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தவில்லை.)

இவைகள் பெயர்வினைகளைத் தழுவி நிற்பதைக் கவனிக்க:—

திணை, பால், எண், இடம் என்பவற்றைத் தெரிவியாது பெயரையாவது வினையையாவது தழுவி நிற்கும் வினை எச்சவினை எனப்படும்.

## அப்பியாசம்.

1. இற்றை வாசிப்புப்பாடத்திலுள்ள முற்றுவினை எச்சவினைகளை வெவ்வேறாக எடுத்தெழுதுக.

2. பின்வரும் வசனங்களிலுள்ள முற்றுவினைகளைக் கூறுக:—
கந்தன் ஓடிப்போனான். அது பாய்ந்து வந்தது. படியாத பிள்ளை உதவாது. மழை பெய்ய மரம் வளரும். நீ படியாமல் பள்ளிக்கூடத்துக்கு வராதே. அவன் எரிகிற நெருப்பைத் தணித்தான்.

3. மேலேயுள்ள வசனங்களின் எச்சவினைகளைக் கூறுக:—

4. எச்சவினை முற்றுவினைகளின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக.

## கஅ. எச்சவினை. PARTICIPLES.

எச்சம் இருவகைப்படும். அவையாவன:—பெயரெச்சம், வினையெச்சம்.

திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தாது பெயரைத் தழுவிநிற்கும் வினை பெயரெச்சம் எனப்படும்.

உதாரணம்:—குரைக்கிற நாய் கடியாது.

திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தாது வினையைத் தழுவிநிற்கும் வினை வினையெச்சம் எனப்படும்.

உதாரணம்:— அவன் வந்து படித்தான்.

குறிப்பு:— எச்சவினைகள் ஒருபோதும் பயனிலையாய்வரமாட்டா.

| காலம் | முற்றுவினை. | எச்சவினை. | | | |
|---|---|---|---|---|---|
| | | பெயரெச்சம். | | வினையெச்சம். | |
| இறந்த காலம். | நடந்தான் | நடந்த | நடவாத | நடந்து | நடவா |
| | வந்தான் | வந்த | வாராத | வந்து | |
| | கற்றான் | கற்ற | கல்லாத | கற்று | |
| | வாழ்ந்தான் | வாழ்ந்த | வாழாத | வாழ்ந்து | |
| | கேட்டான் | கேட்ட | கேளாத | கேட்டு | |
| நிகழ் காலம். | நடக்கிறான் | நடக்கிற | | நடக்க | |
| | வருகிறான் | வருகிற | | வர | |
| | கற்கிறான் | கற்கிற | | கற்க | |
| | வாழ்கின்றான் | வாழ்கிற | | வாழ | |
| | கேட்கின்றான் | கேட்கிற | | கேட்க | |
| எதிர் காலம். | நடப்பான் | நடக்கும் | | நடப்பின் | |
| | வருவான் | வரும் | | வரின் | |
| | கற்பான் | கற்கும் | | கற்பின் | |
| | வாழ்வான் | வாழும் | | வாழின் | |
| | கேட்பான் | கேட்கும் | | கேட்பின் | |

## அப்பியாசம்.

1. இற்றை வாசிப்புப் பாடத்தின் கடைசி இரு பந்தியிலுமுள்ள பெயரெச்ச வினையெச்சங்களை வெவ்வேறாக எழுதுக.

2. இவ்வெச்சங்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.

3. பின்வரும் வினையடிகளினின்று பிறக்கிற இறந்தகால வினைமுற்றுக்களையும், இறந்தகால வினையெச்சங்களையும் கூறுக:— உண், செல், தா, உருள், படு, சா.

4. மேற்கூறிய வினையடிகளினின்று பிறக்கிற எதிர்கால வினைமுற்றுக்களையும் வினையெச்சங்களையும் கூறுக.

5. கீறிடப்பட்ட இடங்களில் ஏற்ற எச்சத்தை அமைத்து வாக்கியத்தைப் பூரணமாக்க. 1. நேற்று———பாடம் இத்தான். 2. பிள்ளைகள் வெளியே———நன்றாய்———சுகமாய் இருப்பார்கள். 3. வயலில்———பசு என்னுடையது. 4. காலால்———போனான். 5. சம்பளம்———தச்சன் வீடுகட்டுவான். 6. அவன்——— எழுத்து நன்றன்று. 7. வான்கோழி———சிறகை———ஆடினது.

6. செய்த, எழுதாத, பெரிய, பொல்லாத, வரும், உழுகிற என்பவற்றை எழுவாய் அடைமொழியாகவைத்து வசனம் எழுதுக.

7. எடுக்காத, கடிக்கிற, கூவின, நில்லாத, இல்லாத, பேசும் என்பவற்றைச் செயப்படுபொருள் அடைமொழியாக வைத்து ஆறு சொற்களுக்குக் குறையாத வசனம் எழுதுக.

8. இருந்து, விளையாடாமல், வையாது, அன்றி, இல்லாமல், விரைவாய், நடக்க, செய்யின் என்பவை பயனிலை அடைமொழியாக வசனம் எழுதுக.

9. செத்தபாம்பு, கடிக்கிறநாய், உறைந்ததயிர், ஓடிவந்த, இருந்த, எழுந்த, உண்ணும்பிள்ளை என்பவற்றிலுள்ள எச்சங்களை எதிர்மறையாக்கி வாக்கியத்திலமைக்க.

10. பின்வரும் இரட்டைவாக்கியங்களை முன்னதன் வினைமுற்றை வினையெச்சமாக்கி ஒரேவாக்கியமாக்குக: 1. நான்பாடசாலைக்குப் போனேன்; ஆசிரியர் சொல்லின்படி செய்தேன். 2. நீ [illegible]

வாழ்வில் வெறுப்புக்கொண்டாய்; நாட்டுப்புறம் போனாய். 3. தம்பி குளத்தில் இறங்கினான்; ஸ்நானஞ்செய்தான். 4. நீர் வீட்டைக் கட்டினீர்; வாடகைக்குக் கொடுத்தீர். 5. நீபழைய நகைகளை அழித்தாய்; புதிய பல நகைகளைச் செய்தாய். 6. அவன் சோலைக்குப் போனான்; நண்பரைக் கண்டு அன்புபாராட்டினான்.

11. பின்வரும் இரட்டைவாக்கியங்களை மேலை அப்பியாசம் போல ஒரேவாக்கியமாக்குக; 1. கோழி கூவிற்று. பொழுது விடிந்தது. 2. மழைபெய்தது. நெல்விளைந்தது. 3. காகம் இருந்தது. பனம்பழம் விழுந்தது. 4. சூரியன் உதித்தான். பனி அற்றது. 5. இளவேனிற் காலம் வந்தது. குயில்கள் கூவின. 6. புயல் அடித்தது. மரம் வீடு விழுந்தன. 7. மழைபெய்தது, வெப்பம் ஒழிந்தது. 8. பரீட்சையிற் சித்திபெற்றேன். உத்தியோகங் கிடைத்தது.

12. பின்வரும் இரட்டைவாக்கியங்களைமுன்னையதன்பயனிலையைப் பயனிலையாகவைத்து ஒரேவாக்கியமாக்குக; (மாதிரி: அவனுக்கு அவசியமான பாடமிருக்கிறது. அதனை இன்றேபடிக்கவேண்டும் = அவனுக்கு இன்றே படிக்கவேண்டிய அவசியமானபாடமிருக்கிறது.) 1. தகப்பனாருக்குப் பணமில்லை. அவருக்கு வியாபாரம் நடக்கவில்லை. 2. அவருக்குக் கூர்மையான புத்தியில்லை. உபாத்தியாயர் சொல்வதைக் கிரகிக்கச் சத்தியில்லை. 3. உறுதிக்கு இருசாட்சிகள் கையொப்பம் வைக்கவேண்டும். இல்லாவிட்டால் உறுதிசெல்லாது. 4. நீ ஒருகிழமையில் இவ்வேலையை நன்றாய்ச்செய்து முடிக்கவேண்டும். அதற்கு இரண்டுபேர்உதவிவேண்டும். 5. யானை துதிக்கையாற் கீழேகிடக்கிற சிறியபொருளையும் எடுக்கும். அதற்குத்தக்கபடியே துதிக்கையின் நுனி அமைக்கப்பட்டிருக்கிறது.

13 .பின்வரும் இரட்டைவாக்கியங்களைப் பின்னையதன் பயனிலையைப் பயனிலையாகவைத்து ஒரேவாக்கியமாக்குக: 1. கொழும்பு இலங்கையின் தலைநகர். அது களனிகங்கை முகத்துவாரத்துக்கு அயலிலுள்ளது. 2. ஒளவையார் நீதிநூல்களியற்றினார். அவர் அநுபவஞானக்கடல். 3. சங்கிலியன் யாழ்ப்பாணக் கடைசித் தமிழரசன், அவனே தமிழரசை யாழ்ப்பாணத்திலே நிலைபெறாமற் செய்தவன்,

4. இராமன் நல்ல குணமுடையவன். அவன் அயோத்தி அரசனாகிய தசரதனுடைய மூத்தகுமாரன். 5. அவன் தன் கடனுக்குப் பயந்தோடினான், அது அயோக்கியமான காரியம்.

15. பின்வரும் இரட்டைவாக்கியங்களை ஆல், ஆனால், ஆனதால், (ஆதலால்) என்பவற்றைப் போன்றவற்றுள் ஏற்ற ஒன்றைச் சேர்த்து ஒரே வாக்கியமாக்குக: 1. நீ உண்மையுள்ளவன், உன்னை எல்லாரும் நம்புவார்கள். 2. நீ நன்றாய்ப்படி, பரீட்சையிற் சித்தி பெறுவாய். 3. கத்திகூர்மையுள்ளது. அது சுலபமாய் மரத்தை வெட்டும். 4. அறிஞர் புத்தியின்படி நட, அபாயம்நேராது. 5. அவன் பராக்கிரமசாலி, சண்டையிலே வெற்றிபெறவில்லை. 6. அவன் சிறுவன், வெகுதூரம் நடந்தான். 7. வகுப்பிற் பிள்ளைகள் மிக்கதொகை, ஒவ்வொருவரையும் உபாத்தியாயர் நன்றாய்க்கற்பிக்கிறார்.

15. பின்வரும் ஒவ்வொரு கூட்டத்திலுள்ள சிறுவாக்கியங்கள் எல்லாவற்றையுஞ் சேர்த்து ஒருபெருவாக்கியமாக்குக::(1) அன்னப்பட்சி தண்ணீரருகில் வசிக்கும்; மீன்களையுந் தண்ணீரிலுள்ள செடிகளையுந் தின்னும்; சீக்கிரமாய் உயரத்திற் பறந்து செல்லும்; அது வாத்தைக் காட்டிலும் பெரியது.

(2) பட்டு ஒருவகைப் பூச்சியிலிருந்து உண்டாகிறது; அது விலையுயர்ந்தது; பளபளப்புள்ளது; மிருதுவானது; உறுதியாயிருக்கும்.

(3) ஓரூரில் ஒருபிராமணன் இருந்தான்; அவன் கல்வியில் மிகவுந் தேர்ந்தவன்; அவ்வூரின்பெயர் மதுரை; அது பாண்டியர்களுக்கு இராசதானி.

(4) என்னிடத்திலே ஒருபுத்தகமிருந்தது; அது மிகப்புதியது; யான் அதனை இழந்துவிட்டேன்; அது எனக்கு மிகவும் உபயோகமாகவிருந்தது.

(5) கோபாலனுடைய ஆடு கருமைநிறமுடையது; அது அரசர் இளமரக்காவிற் புகுந்து மேய்ந்தது; அக்கா ஆற்றோரத்திலுள்ளது; ஆற்றின்பெயர் மந்தாகினி.

## கரு. ஏவல்வினை. வியங்கோள்வினை.

## IMPERATIVES AND OPTATIVES.

ஒருதொழிலைச் செய்யும்படி முன்னிலையிடத்தேயுள்ள ஒருபொருளைக் கற்பிக்கும் வினை ஏவல்வினை எனப் படும்.

**உதாரணம்:**—நீ நடவாய். நீர் உண்ணும். நீ செய்யாய். நீர் உண்மின்.

நீ நட, நீ உண் என்பவற்றிலுள்ள நட, உண் என்ப வைகள் ஏவல்வினை விகுதிகுன்றிய ஏவல்வினை முற்றுக்க ளாம்.

வியங்கோள்வினை ஒருசிறிது ஏவல்வினையை ஒத்தி ருப்பினும் அது இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாய் வரும்.

**உதாரணம்:**—அவன் செய்க. அவள் செய்க. அவர் செய்க. அது செய்க. அவை செய்க. நான் செய்க. நீ செய்க. ஒருவன் செய்க.

### அப்பியாசம்.

1. கொடும், வா, வாழ்க, வா, உண்ணாய் இவற்றிலுள்ள ஏவல் வினைகளையும் வியங்கோள்வினைகளையும் வேறுபிரித்து எழுதுக.

2. இரு, தா, உறங்கு, நில். இவ்வடிகளினின்று பிறக்கும் வியங்கோள் வினைகளும் ஏவல்வினைகளும் அமைய வசனம்எழுதுக.

3. வியங்கோள் வினைக்கும் ஏவல்வினைக்குமுள்ள வேறுபாடு யாது?

## கஅ. பெயர்வினை முடிபு.

## AGREEMENT OF NOUNS AND VERBS.

பெயர், வினைமுற்றுடன் திணை, பால், எண், இடம் என்பவற்றில் ஒத்திருத்தல் வேண்டும்.

திணை: பெயர் உயர்திணையாயாவது அஃறிணையாயாவது இருப்பின் அதனோடு முடியும் வினை முறையே உயர்திணையாயாவது அஃறிணையாயாவது இருக்கும்.

உதாரணம்:—அவள் வந்தாள். கந்தன் வந்தான். குதிரை ஓடினது.

2. பால்: பெயர் எந்தப் பாலாய் இருக்கிறதோ அந்தப் பாலில் வினையும் இருத்தல்வேண்டும்.

உதாரணம்:—மனிதர் ஓடினார். பெண் வந்தாள். அவன் வந்தான். அது உடைந்தது.

3. எண்: ஒருமைப்பெயர் ஒருமைவினையும் பன்மைப்பெயர் பன்மைவினையும் ஏற்கும்.

உதாரணம்:—அது ஊளையிட்டது. குதிரைகள் வந்தன.

4. இடம்: தன்மைப்பெயர் தன்மைவினையும், முன்னிலைப்பெயர் முன்னிலைவினையும், படர்க்கைப்பெயர் படர்க்கைவினையும் ஏற்கும்.

உதாரணம்:—நாம் வந்தோம். நீர் போனீர், அவன் வந்தான்.

### அப்பியாசம்.

1. இற்றை வாசிப்புப்பாடத்தின் 1ம் பகுதியிலுள்ள வாக்கியங்களின் எழுவாய்களையும் அவற்றை முடித்த வினைச்சொற்களையுங் கூறுக.

2. பின்வரும் பெயர்ச்சொற்களை எழுவாயாக வைத்து வசனம் எழுதுக:—தோழி, ஒருவன், இடைச்சி, மனிதர், பார்ப்பனி, அவை, அவர், அது, அவைகள், மரம், மூக்கு, அறிவு, கோபம் யாழ்ப்பாணம், வீடு, சித்திரை, புதன்கிழமை, செய்தல், நீ, நீர், யான், மாடுகள், குதிரை, துரை.

---

## ௧௭. எழுவாயடைமொழி.

## ENLARCEMENT OF THE SUBJECT.

கூரிய கத்தி வெட்டும்.
வெள்ளைப் பசு வந்தது.
இரு மனிதர் ஓடினார்கள்.
வட்டக் கண்ணாடி உடைந்தது.
படித்த பிள்ளை வந்தது.
இரண்டு இறாத்தல் சர்க்கரை கரைந்தது.

மேலேயுள்ள வசனங்களின் பயனிலைகளைக் கூறுக. இப்பயனிலைகளுக்கு எழுவாய்கள் கூறுக. பெரிய எழுத்திலுள்ள கூரிய, வெள்ளை, இரு, வட்ட, படித்த, இரண்டு இறாத்தல் என்பன முறையே கத்தி, பசு, மனிதர், கண்ணாடி, பிள்ளை, சர்க்கரை என்னும் எழுவாய்களின் தன்மைகளை உணர்த்துகின்றன.

எழுவாயின் தன்மையை உணர்த்தியும், அதனை அடுத்தும் வருஞ்சொல் எழுவாயடைமொழி எனப்படும். அடைமொழி, விசேடணம் என்பன ஒருபொருள் குறிக்கும்.

ஒரு வாக்கியத்தின் எழுவாய் அடைமொழி அறிதற்கு எத்தனை, எவ்வளவு, எத்தன்மையான என்பன

வற்றை எழுவாயுடன் சேர்த்து வினவுக. வரும்விடையே எழுவாய் அடைமொழியாகும்.

| | | | |
|---|---|---|---|
| எத்தன்மையான? | கூரிய | ... | எழுவாய் |
| எத்தனை மனிதர்? | இரு | ... | அடை |
| எவ்வளவு சர்க்கரை? | இரு இறாத்தல் | ... | மொழி. |

## அப்பியாசம்.

II. பின்வரும் வசனங்களிலுள்ள எழுவாய் அடைமொழிகளைக் கூறுக:—1. கபடமுள்ள நரிஅதனைக் கௌவித் தின்றது. 2. ஒரு திருட்டுக்காக்கை அப்பத்தைத் திருடியது. 3. அப்பத்தை உடைய காக்கை மரத்தில் இருந்தது. 4. காக்கையை ஒரு குள்ளநரிகண்டது. 5. தந்திரமுள்ள நரியால் மதிகெட்ட காக்கை அணுப்பப்பட்டது. 6. ஏழைக்காகம் மரத்தில் இருந்தது. 7. ஒரு சிறுதுண்டு அப்பம் கீழே விழுந்தது.

III. மேலேயுள்ள வசனங்களின் எழுவாய், எழுவாய் அடைமொழி, பயனிலை, செயப்படுபொருளைக் கூறுக.

IV. இன்று படித்த வாசிப்புப்பாடத்தின் 3-ம் பந்தி வாக்கிய எழுவாய்களையும் அவற்றின் அடைமொழிகளையும் வரிசைப்படுத்தி எழுதுக.

V. பின்வருஞ் சொற்கள் எழுவாய் அடைமொழிகளாய் வர வசனம் எழுதுக:—படிக்கிற, பெரிய, சிறப்பான, நான்கு, விவேகமுள்ள, கூரியபற்களுடைய, அவ்வழியாற்சென்ற.

---

## ௧௮. செயப்படுபொருள் அடைமொழி.
## ENLARGEMENT OF THE OBJECT.

ஒரு பூனை இரு எலியைக் கண்டது.
பெரிய எருது பசும் புல்லை மேய்ந்தது.
அவள் ஒருகிண்ணம் பாலைக் குடித்தாள்.

மேலேயுள்ள வசனங்களின் செயப்படுபொருள்களைக் கூறுக:—(எலி, புல், பால்.)

| | | |
|---|---|---|
| எத்தனை எலி? ... | இரு ... | செயப்படுபொருள் அடைமொழி. |
| எத்தன்மையான புல்? ... | பசும் ... | |
| எவ்வளவு பால்? ... | ஒருகிண்ணம் ... | |

செயப்படுபொருளின் தன்மையை உணர்த்தியும் அதனை அடுத்தும் வருஞ்சொல் செயப்படுபொருள் அடைமொழி எனப்படும்.

## அப்பியாசம்.

I. இன்று படித்த வாசிப்புப்பாடத்தின் 1-ம்பந்தி வாக்கியச் செயப்படுபொருள்களையும் அவற்றின் அடைமொழிகளையும் வெவ்வேறாக எழுதுக.

II. பின்வரும் வசனங்களிலுள்ள செயப்படுபொருள் அடைமொழிகளைக் கூறுக:—1. தாகமுள்ள காக்கை ஒருசெப்புக் குடத்தைக் கண்டது. 2. அது தன் நீண்ட சொண்டை உட்செலுத்தியது. 3. குடத்தின் அடியிலிருந்த நீரைக் காகம் குடித்தது. 4. அந்த நீர் அதன் கொடிய தாகத்தைத் தணித்தது. 5. தாகம் நீக்கிய காக்கை மரத்திலுள்ள தன் கூட்டை அடைந்தது. 6. அது தான் தண்ணீர் குடித்த வகையைத் தெரிவித்தது.

III. மேலேயுள்ள வசனங்களின் எழுவாய், எழுவாய் அடைமொழி, பயனிலை. செயப்படுபொருள், செயப்படுபொருள் அடைமொழிகளைக் கூறுக.

IV. பின்வருஞ் சொற்களையும், சொற்றொடர்களையும் செயப்படுபொருளின் அடைமொழியாக வைத்து வசனம் எழுதுக:—அழகிய. இனிப்பான, செடிகளடர்ந்த, இருபக்கமும் ஒரேவிதமான, ஆயிரத்து இருநூற்று ஐம்பது, ஒரு பறை.

---

## ௩௬. பயனிலை அடைமொழி.
## EXTENSION OF THE PREDICATE.

கொடிய நாய் நேற்று என் தம்பியைக் கடித்தது.
அது காலில் கடித்தது.
அது பல்லால் கடித்தது.
அது வழியில் நின்று கடித்தது.
அவன் படிக்க வந்தான்.
அவன் அதை எனக்குக் கொடுத்தான்.

மேலேயுள்ள வசனங்களின் பயனிலைகளைக் கூறுக:—
(கடித்தது, வந்தான், கொடுத்தான்.)

| | | |
|---|---|---|
| எப்போது கடித்தது? | நேற்று | பயனிலை அடைமொழிகள். |
| எவ்விடத்தில் கடித்தது? | காலில் | |
| எதனால் கடித்தது? | பல்லால் | |
| எங்கே கடித்தது? | வழியில் நின்று | |
| ஏன் வந்தான்? | படிக்க | |
| யாருக்குக் கொடுத்தான்? | எனக்கு | |

பயனிலைத்தொழில், நிகழ்ந்தகாலம், இடம், தன்மை என்பவற்றையும் பிறவற்றையும் உணர்த்தி அதனைச் சார்ந்து வருஞ்சொல் பயனிலை அடைமொழி எனப்படும்.

### அப்பியாசம்.

I. இன்று வாசித்தபாடத்தின் 2-ம் 3-ம் பந்தி வாக்கியப் பயனிலைகளையும் அவற்றின் அடைமொழிகளையுங் கூறுக.

II. பின்வரும் வசனங்களிலுள்ள பயனிலை அடைமொழிகளைக் கூறுக:—1. இராவணன் இலங்கையை அநேகவருடங்களுக்கு முன்னே ஆண்டான். 2. அவன் ஒருபெரிய அரசன். 3. அவன் தன் சகோதரியால் இந்தியாவுக்குச் சென்றான். 4. அவன் அங்கே

இராமன் மனைவியாகிய சீதையைக் கவர்ந்தான். 5. இராமன் தன் சேனைகளோடு இலங்கையை அடைந்தான். 6. இராவணன் இராமனாலே தண்டிக்கப்பட்டு அரசை இழந்தான். 7. பழம்நழுவிப் பாலில் விழுந்தது. 8. ஆலயந் தொழுவது சாலவும் நன்று. 9. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது. 10. கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல். 11. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.

III. மேலேயுள்ளவசனங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றையும் அவற்றின் அடைமொழிகளையுங் கூறுக.

---

## ௨௦. வாக்கிய முடிபு.

## ANALYSIS OF A SENTENCE.

ஒரு வாக்கியத்தில் அமைந்த எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றையும் அவற்றின் அடைமொழிகளையும் தனித்தனியே பிரித்தறிதல் வாக்கிய முடிபு எனப்படும். இதனை அட்டவணை முகத்தால் விளக்கல் நன்று.

### வாக்கியமுடிபு அட்டவணை.

1. பஞ்சவர்ணக் கிளி பழுத்த கொய்யாப் பழத்தைக் கொத்தித்தின்றது.

2. சூரியன் உதிக்க இவனும் வந்தான்.

3. மழை பெய்து குளம் நிறைய மீன் மிகுந்தது.

4. நேற்றுக்காலையில் அவனோடு போய் இலக்கிய பாடத்தைப் படித்தேன்.

5. கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்.

6. இலங்கையை ஆண்ட இராவணன் ஒரு பெரிய அரசன்.

| | எழுவாய். | எ. அடை. | பயனிலை. | பய. அடை. | செயப்படுபொருள். | செ. அடை. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிளி | பஞ்சவர்ணம் | தின்றது | கொத்தி | பழம் | பழுத்த கொய்யா |
| 2 | இவன் | | வந்தான் | சூரியன் உதிக்க | | |
| 3 | மீன் | | மிதந்தது | மழைபெய்து குளம் நிறைய | | |
| 4 | நான் (தோன்றா எழுவாய்) | | படித்தேன் | நேற்றுக்காலையில், அவனோடுபோய் | பாடம் | இலக்ககியம் |
| 5 | நீ (தோன்றா எழுவாய்) | | பேசேல் | கூர் அம்பு ஆயினும் | வீரியம் | |
| 6 | இராவணன் | இலங்கையை ஆண்ட | அரசன் | ஒரு பெரிய | | |

## அப்பியாசம்.

1. பின்வரும் வாக்கியங்களை அட்டவணையில் வாக்கியமுடிபு செய்க:—

1. நான் அங்கே ஒருநாள் போனேன்.
2. குன்றின் உச்சியில் பெரிய கோயில் ஒன்று உண்டு.
3. மறுநாட் காலையில் பிள்ளைகள் அவனை எழுப்பினார்கள்.
4. கடைசியில் அருச்சுனன் முறை வந்தது.
5. நான் பிறந்த ஊர் யாழ்ப்பாணம்.
6. அறம் செய விரும்பு.
7. எனக்கு இன்று ஒரு புத்தகம் கிடைத்தது.
8. நெல்லுச் சோற்றைப் பசிதீர உண்டோம்.

9. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியும்.

10 நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போல் காணும்.

11. அட்டாலும் பால் சுவையில் குன்றாது.

12. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்-

13. இன்று வாசித்த பாடத்தில் 6-ம் வாக்கியம்.

---

## ௨௯. இடைச் சொல்.

(1-ம் பாடத்து வசனத்தை ஈண்டுங்கொள்க.)

இவ்வசனத்திலுள்ள பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையும் இருபந்தியிற் குறிக்க; அவை அல்லாத சொற்களை 3-ம் பந்தியிற் குறிக்க. அச்சொற்களாவன:

| | | |
|---|---|---|
| இன்று | பொருட்டு | ஐயோ |
| போல் | பொள்ளென | என |
| ஆகிய | நெறுநெறென | ஆனால் |
| | | ஆங்கு. |

இச்சொற்கள் பெயருமன்று; வினையுமன்று. இவை இடைச்சொற்கள். இவ்வாறு வசனங்களில் வழங்குஞ் சொற்களுள் பெயர்ச்சொல் வினைச்சொற்களல்லாதன யாவும் இடைச் சொற்களாகும். ஆகவே, வசனங்களில் பெயர் வினை, இடை ஆகிய மூவகைச் சொற்களுண்டு.

### அப்பியாசம்.

1. பின்வரும் வாக்கியங்களிலே பெயர் வினைச்சொற்களல்லாத சொற்களைக் குறிக்க. அவை என்ன சொற்கள்? நான் இன்று பாடசாலைக்குப் போனேன். ஐயோ அவ்வீடு எரிகிறது. வீட்டுக்கு உரியவர்கள் அங்கு இல்லை. அயலில் உள்ளவராதல் அணைக்கவில்லை. எரிகின்றதீ அப்பாலும் பரவும்போலத் தோற்றுகிறது. ஆபத்

துக்கு உதவு என்று பெரியோர் சொல்லியுளர். ஆதலால் நாமும் நீங்களுஞ் சென்று இயன்ற உதவி செய்வோம்.

2, வாசித்த 3 பாடத்திலுள்ள இடைச்சொற்களை எழுதுக.

3. சாதாரணமான எங்கள் பேச்சில் உபயோகமாவனவற்றுள் பெயர்வினைகளல்லாத சொற்களைக் குறிக்க, அவை என்ன சொற்கள்?

4. மேலே குறியாத இடைச்சொற்களமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக.

5. ஒவ்வொன்றிலும் ஒவ்வோரிடைச் சொல்லுள்ள 12 வாக்கியங்களெழுதி இடைச்சொற்களின் கீழ்க்கீறிடுக.

---

## ௨௨. சுட்டு, வினா.

அ, இ, உ என்னும் மூன்று எழுத்துக்களும் ஒன்றைச் சுட்டிப்பேசுதற்காகச் சேர்க்கப்படுகின்றன. அவை சொல்லுக்கு முன்னே நின்று ஒரு பொருளைக் குறிக்கும் பொழுது சுட்டெழுத்துக்களெனப்படும்.

உதாரணம்:—அவன். இவன். உவன். அவ்வீடு. இப்பனை. உவ்வயல்.

வினா என்பது கேள்வி. வினாவுதலில் எ, யா என்னும் எழுத்துக்களைச் சொல்லின் முதலிலும், ஆ, ஓ என்னும் எழுத்துக்களைச் சொல்லின் கடையிலும், ஏ என்னும் எழுத்தைச் சொல்லின் முதல், கடையென்னும் இரண்டிடத்தும் சேர்த்து வழங்குகின்றோம்.

| | | |
|---|---|---|
| முதல். | எ | ... எவன் எது, எவை, எவ்வீடு. |
| | யா | ... யாவர் யாது, யாவை, யாருக்கு. |
| கடை. | ஆ | ... கந்தனா. |
| | ஓ | ... சுப்பனோ. |
| முதல். | ஏ | ... ஏன், ஏது. |
| கடை. | | ... அவனே. |

வினாப்பொருள் குறிக்குமிடத்து எ, யா, ஆ, ஓ, ஏ என்னும் ஐந்தும் வினாவெழுத்துக்கள் எனப்படும்.

## அப்பியாசம்.

1. அ, இ, உ சுட்டுப்பொருளில் வரும் ஐம்பாற்சொற்களையும் எழுவாயாக வைத்து வாக்கியமெழுதுக.

2. இன்று வாசித்தபாடத்திலே வினாப்பொருளில் வந்த எழுத்துக்களையும் அவை சேர்ந்துள்ள சொற்களையுங் குறிக்க.

3. நேற்று வாசித்த பாடத்திலுள்ள வினா வாக்கியங்களை எழுதுக.

4. அவற்றை வினாப்பொருள் தோன்றாதபடி எழுதுக.

5. இன்று வாசித்த பாடத்திலே உள்ள வினாவல்லாத 10 வாக்கியம் எழுதுக.

6. அப்பத்து வாக்கியங்களையும் வினாவாக்கி எழுதுக.

7. எ, யா வினாவாகவுள்ள உயர்திணைப்பெயர்களைச் செயப்படுபொருளாக வைத்து வாக்கியமெழுதுக.

8. எ, யா வினாவாகவுள்ள அஃறிணைப்பெயர்களைப் பயனிலையாகவைத்து வாக்கியம் எழுதுக.

9. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்களை (பயனிலை) வினாவாக்கி எழுதுக:—1. அவன் வீணாய்க் கோபிக்கிறான். 2. நீ தக்க நியாயமின்றிச் சண்டையை உண்டாக்குகிறாய். 3. அவர் வீண்வாதஞ்செய்கிறார். 4. உன் சகோதரி நன்றாய்ச் சமைப்பாள். 5. நீர் உரிமையை இழந்தீர். 6. நாம் பகலில் உறங்குகிறதில்லை. 7. நீ ஓடி வந்தாய். 8. இவ்வீடு தச்சனாற் கட்டப்பட்டது.

10. 9-ம் வினாவிலுள்ள வாக்கியங்களின் எழுவாயை வினாவாக்கி எழுதுக.

## ௨௩. உடன்பாடு, எதிர்மறை.

| | |
|---|---|
| வாசித்தான் | வாசித்திலான் |
| வாசிக்கின்றான் | வாசிக்கின்றிலான் |
| வாசிப்பான் | வாசியான் |
| பார்த்தாய் | பார்த்திலாய் |
| பார்க்கிறாய் | பார்க்கின்றிலாய் |
| பார்ப்பாய் | பாராய் |
| கொடுத்தேன் | கொடுத்திலேன் |
| கொடுக்கின்றேன் | கொடுக்கின்றிலேன் |
| கொடுப்பேன் | கொடேன் |

1-ம் பந்தியிலுள்ளவை உடன்பாட்டுவினை என்றும், 2-ம் பந்தியிலுள்ளவை எதிர்மறைவினை என்றுஞ் சொல்லப்படும். தொழில் நிகழ்ச்சியை உடன்படும்வினை உடன்பாட்டு வினை; தொழில் நிகழ்ச்சியை மறுக்கும்வினை எதிர்மறைவினை.

### அப்பியாசம்.

1. இன்று வாசித்த பாடத்தின் முதலிரு பந்தியிலுமுள்ள உடன்பாட்டு முற்றுவினைகளையும் எச்சவினைகளையும் வெவ்வேறாக எழுதுக.

2. மற்றிருபந்தியிலுமுள்ள எதிர்மறை முற்றுவினைகளையும் எச்சவினைகளையும் வெவ்வேறாக எழுதுக.

3. எதும் ஒரு பந்தியிலுள்ள உடன்பாட்டுச் சொற்களுக்கு எதிர்மறைச் சொற்களும், எதிர்மறைச்சொற்களுக்கு உடன்பாட்டுச் சொற்களும் எழுதுக.

4. மேல்வரும் உடன்பாட்டுச் சொற்களையும் வாக்கியங்களையும் எதிர்மறையாக்குக. சிரிப்பேன், போனாய், வருகின்றான், இறந்தார், பிறக்கிறார், நான்வீட்டைக்கட்டினேன், அதுநல்லது, நான்கு மனிதர் வந்தார்களா? பொன்னி உலை ஏற்றினாளா? தேங்காய் உரிக்கப்பட்டது.

5. மேல்வரும் எதிர்மறைச் சொற்களையும் வாக்கியங்களையும் உடன்பாடாக்குக: விற்றிலேன், ஓடுகின்றிலாய், படியான், வந்திலன், இளவரசர் போருக்குச் சென்றிலர், நீ உரிய பிரகாரம் பாடம் படித்திலாய், அவர்கள் சமாதானத்திற்கு இணங்கார்களா? தந்தையார் புத்தகத்திற்குக் காசுதந்திலரோ.?

6. இன்று வாசித்த பகுதியிலே ஐவைந்து உடன்பாட்டு வாக்கியங்களும் எதிர்மறை வாக்கியங்களும் எழுதி, உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாகவும், எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுக.

---

## ௨௧. எழுத்தின் வகை.
## CLASSIFICATION OF LETTERS.

சொல்லுக்குமுதற்காரணமாகிய ஒலியே எழுத்தெனப்படும். அவ்வெழுத்து நான்கு வகை:—

1. உயிரெழுத்து.
2. மெய்யெழுத்து.
3. உயிர்மெய்யெழுத்து.
4. ஆய்தவெழுத்து. (ஃ)

இவற்றுள் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமிழ்ப் பாஷைக்கு முதற்காரணமாயிருப்பதால் முதலெழுத்து எனப்படுகின்றன. உயிர்மெய்யெழுத்து இவைசேர்ந்து பிறத்தலானும், ஆய்தவெழுத்து இவற்றைச்சார்ந்து வருதலானும் சார்பெழுத்து எனப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| உயிர்<br>மெய் | } முதலெழுத்து | உயிர்மெய்<br>ஆய்தம் | } சார்பெழுத்து- |

உயிரெழுத்துக்களைக் குறுக்கியும் நீட்டியும் உச்சரிக்கின்றோம். அதனால் உயிர் இரண்டு வகைப்படும்:—

1. குறில் அ, இ, உ, எ, ஒ 5.
2. நெடில். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ 7.

அ முதலிய ஐந்தும் குற்றெழுத்து என்றும், ஆ முதலிய ஏழும் நெட்டெழுத்து என்றும் சொல்லப்படும்.

மெய்யெழுத்து, தொனிபற்றி மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது:—

1. வல்லெழுத்து. 2. மெல்லெழுத்து. 3, இடையெழுத்து.

1. வல்லினம் க், ச், ட், த், ப், ற். இவற்றை உச்சரித்து இவை கடினமான தொனியை உடையன என்பதை அறிக. இவை கடினமான தொனியையுடையனவாதலால்

வல்லினம் எனப் பெயர் பெற்றன.

2. மெல்லினம் ங், ஞ், ண், ந், ம், ன். இவை மெலிய தொனியையுடைமையால் மெல்லினமென்று பெயர் பெற்றன.

3. இடையினம் ய், ர், ல், வ், ழ், ள். இவைமெல்லினத்துக்கும் வல்லினத்துக்கும் இடையான தொனியை உடைமையால் இடையினம் என்னும் பெயரைப் பெற்றன.

## உஉ. எழுத்தின் வகை. (தொடர்பு)
## CLASSIFICATION OF LETTERS.
## (Ccntinued·)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எழுத்து 247 | முதலெழுத்து. | 30 | உயிரெழுத்து. | 12 | குற்றெழுத்து. | 5 |
| | | | | | நெட்டெழுத்து. | 7 |
| | | | மெய்யெழுத்து. | 18 | வல்லெழுத்து. | 6 |
| | | | | | மெல்லெழுத்து | 6 |
| | | | | | இடையெழுத்து | 6 |
| | சார்பெழுத்து. | 217 | உயிர்மெய்யெழுத்து. | 216 | *உயிர்மெய்க் குற்றெழுத்து. | 90 |
| | | | | | ¶உயிர்மெய் நெட்டெழுத்து | 126 |
| | | | ஆய்தவெழுத்து. | 1 | ——— | 1 |
| 247 | | 247 | | 247 | | 247 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| * | வல்லின உயிர்மெய்க் குறில். | 30 | ¶ | வல்லின உயிர்மெய் நெடில். | 42 |
| | மெல்லின உயிர்மெய்க் குறில். | 30 | | மெல்லின உயிர்மெய் நெடில். | 42 |
| | இடையின உயிர்மெய்க் குறில். | 30 | | இடையின உயிர்மெய் நெடில். | 42 |
| | | 90 | | | 126 |

## ௨௫. தொடர்மொழி, அனுபந்தம்.

பின்வருந் தொடர்மொழிகளை அவதானித்துத் தனிமொழிகள் தொடர்மொழியாதலைப் பயில்க:—

1. பனையோலை, பூவிதழ், அரிசியெடு, வழியில்லை, பலாவிலை, நடுவிடம், பலவாசர், நீயறிவாய். இவற்றைத் தனிமொழிகளாக்குக.

அந்த, ஊர்; மழை, இல்லை; வெற்றி, உண்டு; அரிசி, உண்டு; அவனே, எறிந்தான்; மா, அரி; செய்த, உதவி; இவை, கூடாகா; கடதாசி, எழுது. இவ்விரட்டைகளைத் தொடர்மொழிகளாக்குக.

2. வரகரிசி, எருதோடும், பயறன்று, அங்கிருப்பான், பாக்கெடு, கதலருகு, உப்பாறு, ஆற்றோரம், வரட்டாடு, ஓராண்டு, ஓராயிரம், ஈரிரண்டு, ஈரேடு, மூவொன்று, மூவுலகு, நாலடி, நாலிரண்டு, ஐயெட்டு, ஆறம்பு, எழுலகம், எண்ணாயிரம், ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றிரண்டு, பதினாயிரம், பதிற்றொன்று, பதினொன்று, பன்னிரண்டு, ஒவ்வொன்று, இவ்விரண்டு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, இருபத்தொன்று, எவ்வாசன், எவ்வணி, பனாட்டு. இவற்றைத் தனிமொழிகளாக்குக.

தவிடு, எங்கே; இறகு, உதிர்ந்தது; பாட்டு, எழுது; இங்கு, இரு; ஆடு, இடையன்; காடு, ஆனை; ஒன்று, ஆண்டு; இரண்டு, உயிர்; மூன்று, இரண்டு; நான்கு, அடிப்பு; ஐந்து, ஒன்று; ஆறு, இதழ்; எழு, ஆறு; எட்டு, உடல்; எட்டு, எழு; ஒன்பது, ஒன்று; ஒன்பது, ஆண்டு; ஒன்பது, ஆயிரம்; பத்து, எழு; பத்து, இரண்டு; இரண்டு, இரண்டு; எழு, எழு; நாற்பது, ஐந்து; நாற்பது, ஆறு; எ, ஊர்; எ, அளவு; அ, ஓலை; இ, அரும்பு இவ்விரட்டைகளைத் தொடர்மொழிகளாக்குக.

3. படிக்கப்போகிறேன், எடுக்கச்சொன்னேன், நில்லெனக் கூறினன், சாவப்புடைத்தான், மெல்லப்பேசு, மிகப்பெரிது, அக்குளம், இவ்வயல், உண்ணைப்பண்டார், தின்னக்கிடந்தன, பலாப்

பழம், தம்பிப்பையல், செட்டித்தெரு, கிளிச்சொண்டு, உண்டன்றிப்போகேன், இனிச்செய், மீக்கூற்று, அடித்துப்பறித்தான், எடுத்துக்கொடுத்தான், பூத்துக்காய்த்தது, படித்தற்குப்போ, அங்குப்போகேல், இங்குத்தா, யாண்டுக்கண்டாய், எட்டுக்கழஞ்சு, பத்துத்தேங்காய், வடக்குத்தெற்கு, மேற்குக்கிழக்கு, வடுப்பெரிது, பண்டைக்காலம், மருந்துப்பை, ஒற்றைக்கை, இற்றைக்கூலி, ஆட்டுத்தலை, குருட்டுக்கண், எருத்துத்தோல், குற்றுயிர், கீழ்த்திசை, கீழைச்சேரி, உவ்வீடு, உக்காசு, எப்பொருள், எந்நாடு, எவ்வழி, எவ்யானை, தினைத்தாள், சாரைப்பாம்பு, பனைக்கை, பனைக்கொடி, விளங்காய், மாந்துளிர், பூஞ்சோலை, முல்லையம்புறவம், தாழம்பூ, பனங்காய், வழுதுணங்காய். இவற்றைத் தனிமொழிகளாக்குக.

நிற்க, கண்டேன்; படியென, சொன்னேன்; சாவ, குத்தினான்; மிக, தருவார்; அ, செய்கை; அ, மலை; மா, பண்டம்; கா, தடி; கிளி, கால்; காய்ச்சி, படை; மாசி, திங்கள்; இனி, போ, இ, மணி; இ, யாறு; எடுத்து, பூசு; எடுத்தற்கு, சென்றாய்; இங்கு, செல்; அங்கு, கொடு; யாண்டு, பெற்றாய்; பண்டு, புலவர்; அன்று, சம்பளம்; ஒன்று, கால்; மருந்து, பூண்டு; கிழக்கு, கரை; தெற்கு, தெரு; எட்டு, தேங்காய்; பத்து, காசு; உ, தரை; உ, மாடு; உ, யாறு; வாழை, காய்; தினை, சோறு; குதிரை, குட்டி; யானை, கன்று; தமக்கை, குமரி; மா, பழம்; தாழை, தும்பு, இவ்விரட்டைகளைத் தொடர்மொழிகளாக்குக.

4. மேய்ந்தபசு, ஓடுகின்றகுதிரை, வெளுத்தபயிர், சிறியபூ, பெரியதடி, பலபாக்கு, சிலபாய், வாசிக்காதபாடம், உண்ணியபோனான், தின்றனகுதிரை, உண்பனகாகம், சிறியனசெந்நாய், பலபல, சிலசில, உண்ணாப்பன்றிகள், உண்ணாகிடந்தன, பருத்திகுறிது, பரணிகார்த்திகை, நீபெரியை, தீகொடிது, நாகுபெரிது, வாகுபயிர், குரங்குகொடியது, எய்துகொன்றான், அன்றுகண்டான், இன்றுசொன்னான், பண்டுசெய்தான், தெள்குசிறை, எஃகுதீமை, நாகுபுறம், வாகுகதிர், மகனநுதலை, விண்ணின்று பொய்ப்பின்,

உடுபுடவை, புகுதானை, தெறசேனை, ஒருபொருள், இருதிணை, அறுபது, எழுகடல், முப்பது, நாற்பால், ஐம்பொறி, எண்குணம், வடதிசை, தென்கிழக்கு, அவனேபோகிறான். இவற்றைத் தனிமொழிகளாக்குக.

பாய்ந்த, குதிரை; நிற்கிற, பசு; சிவந்த, நிலை; கறுத்த, சாமி; சிறிய, கொடி; பெரிய, பொருள்; உரிய, தொழில்; வாடாத, பயிர்; சொல்லிய, சென்றான்; தின்றன, பசு; பறப்பன, கிளி; பல, கமுகு; சில, தேங்காய்; நில்லா, குதிரைகள்; தின்று, சென்றன; கிளி, பறக்கிறது; மாசி, பங்குனி; தீ, சிறிது; நீ, கொடியை; ஆடு, சிறிது; மார்பு, பெரிது; இயல்பு, புணர்ச்சி; எஃகு, கடிது; அன்று, கொடுத்தான்; இன்று, பெற்றாய்; தெள்கு, கால்; வரகு, சோறு; அவனொடு, போ; எனது, கண்; அடி, களிறு; புகு, படை; ஒன்று, முகம்; இரண்டு, செவி; ஆறு, பதம்; மூன்று, பொருள்; நான்கு, பத்து; ஐந்து, திணை; எட்டு, திக்கு; வடக்கு, கிழக்கு; தெற்கு, கரை; அவனே, சொன்னான். இவ்விரட்டைகளைத் தொடர்மொழிகளாக்குக.

5. மண்குறைவு, பாண்குடி, பரண்கால், கவண்கல், விண்மாட்சி, மண்வலிது, மரம்பெரிது, அரம்வலிது, புலியையானையும், பாலும்மோரும், காய்சிறிது, பேய்பூதம், வேர்தீது, தேர்பொருள், கல்யாறு, கால்பெரிய, நில்பூதா, நடத்தல்கடிது, கால்கை, தோன், றல்கூறாய், கால்குதித்து, கடல்புக, அவ்யாவை, யாழ்பெரிது, இகழ்புகழ், வீழ்புனல், கேள்சாத்தா, அருள்குரு, கொள்பொருள், மரங்கள்சிறிய, மக்காள்சொல்லீர், முள்யாப்பு, வாள்போழ்ந்து, பொன்பெரிது, பொன்வன்மை, தேன்போதியது, தேன்மலிவு, தேன்யாறு, தேன்குடம், எகின்கால், தின்பகை. இவற்றைத்தனிமொழிகளாக்குக.

கண், பெரியது; விண், யாது; பரண், பலகை; கவண், கொடி; உடன், தடு; கீரியும், பாம்பும்; யானையும், யாளியும்; காய், புதிது;

நாய், கடிக்கும்; தேர், பெரிது; நார், கடிது; கால், சிறிய; இருத்தல், சிறந்தது; செல், செங்கண்ணு; வள்ளல், கொடாய்; இவ், யாவை; யாழ், கரிது; புகழ், பொருள்; மரங்கள் பெரிய. அருள் கோவிந்தன்; அடிகாள், கூறீர்; வாள், பழுது; தேன், சுவை நின், பாட்டு; இவ்விரட்டைகளைத் தொடர்மொழிகளாக்குக.

---

## I. ரகர, றகர வழக்கு.
## THE USE OF ர AND ற.

பின்வருஞ் சொற்களை உற்று நோக்குவதாலும் எழுதிப் பயிலுதலாலும் ரகர றகரங்கள் எழுதவேண்டிய இடங்களை அறிந்துகொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| பயிர் ... ... | பயிர்ச்செய்கை | பயில் ... | பயிற்சி |
| புணர் ... ... | புணர்ச்சி | முயல் ... | முயற்சி |
| உணர் ... ... | உணர்ச்சி | கல் ... | கற்கண்டு |
| வார் ... ... | வார்த்தான் | நெல் ... | நெற்பயிர் |
| வளர் ... ... | வளர்ச்சி | அதன் ... | அதற்கு |
| தளர் ... ... | தளர்ச்சி | ஒருவன் ... | ஒருவற்கு |
| | சர்க்கரை | | |
| | வர்த்தி | | |
| பெயர் ... ... | பெயர்ச்சொல் | ஒருவர் ... ... | ஒருவர்க்கு |
| | நிலைபெயர்ச்சி | கர்ச்சித்தது ... | பார்ப்பான் |

---

## II. ழகர வழக்கு. THE USE OF ழ.

பின்வருவனவற்றை உற்றுப் பார்த்தும், உச்சரித்தும்

வசனங்களில் அமைத்து எழுதியும்வரின் ழகரம் வரும் இடங்களை அறியலாம்.

1. கிழவன், பிழை, கிழக்கு கீழ்மாகாணம், கிழமை சனிக்கிழமை, பனங்கிழங்கு, நாழி, நாழிகை, நாழிகைவட்டம், யாழ்ப்பாணம், ஏழு, முழம், முழுவதும், கழுத்து, புழு, மழை, விழி, கோழி, குழாய்.

| | | | |
|---|---|---|---|
| 2 அழை | அழைத்தான் | அழைத்த | அழைப்பு, அழைத்தல் |
| அழு | அழுவான் | அழுகிற | அழுகை, அழுதல் |
| அழுகு | அழுகினது | அழுகும் | அழுகுதல் |
| அமிழ் | அமிழ்ந்தினான் | அமிழ்ந்தி | அமிழ்ந்துதல் |
| ஆழ் | ஆழ்ந்தான் | ஆழ்ந்த | ஆழம் |
| இழி | இழிந்தான் | இழிந்த, இழிவான | இழிவு, இழிதல் |
| இழை | இழைத்தான் | இழைத்த | இழைப்பு, இழைத்தல் |
| இகழ் | இகழ்ந்தான் | இகழுகிற | இகழ்ச்சி, இகழ்தல் |
| உமிழ் | உமிழ்கின்றான் | உமிழ்ந்து | உமிழ்நீர், உமிழ்தல் |
| உழை | உழைத்தாள் | உழைத்து | உழைப்பு, உழைத்தல் |
| உழு | உழுதான் | உழுத | உழவர், உழவு, உழுதல் |
| எழு | எழுந்தான் | எழுந்தது | எழும்பு, எழுச்சி, எழுதல் |
| எழுது | எழுதினார் | எழுதி | எழுத்து, எழுதுதல் |
| ஒழி | ஒழித்தான் | ஒழிந்த, ஒழித்து | ஒழிவு, ஒழிதல் |
| ஒழுகு | ஒழுகினது | ஒழுகிய | ஒழுக்கம், ஒழுகல் |
| கழி | கழித்தான் | கழித்து | கழிப்பு, கழித்தல் |
| கழுவு | கழுவுவான் | கழுவிய | கழுவுதல் |
| கிழி | கிழிந்தது | கிழித்து | கிழிவு, கிழித்தல் |
| குழை | குழைந்தாள் | குழைந்த | குழைவு, குழைதல் |
| கொழி | கொழித்தாள் | கொழித்து | கொழித்தல் |
| கொழு | கொழுத்தாள், கொழுத்தது | கொழுத்த | கொழுப்பு, கொழுத்தல் |
| சுழல் | சுழன்றான் | சுழன்று | சுழல்காற்று |
| சூழ் | சூழ்ந்தது | சூழ்ந்து | சூழ்ச்சி, சூழ்தல் |

| | | | |
|---|---|---|---|
| செழி | செழித்தது | செழித்து | செழுமை, செழிப்பு |
| தழுவு | தழுவினன் | தழுவி | தழுவுதல் |
| தாழ் | தாழ்ந்தது | தாழ்ந்து | தாழ்மை, தாழ்தல் |
| தொழு | தொழுதார் | தொழுது | தொழுதல் |
| நழுவு | நழுவினன் | நழுவி | நழுவுதல் |
| நிகழ் | நிகழ்ந்தது | நிகழ்ந்த | நிகழ்காலம், நிகழ்ச்சி, நிகழ்தல் |
| நுழை | நுழைந்தது | நுழைத்து | (நரி) நுழை, நுழைதல் |
| பழி | பழித்தான் | பழித்து | பழிப்பு, பழித்தல் |
| பழு | பழுத்தது | பழைய | பழம், பழுப்பு, பழுத்தல் |
| பிழை | பிழைத்தான் | பிழைத்து | பிழைப்பு, பிழைத்தல் |
| மகிழ் | மகிழ்ந்தான் | மகிழ்ந்து | மகிழ்ச்சி, மகிழ்தல் |
| முழங்கு | முழங்கினது | முழங்கி | இடிமுழக்கம் |
| முழுகு | முழுகுவோம் | முழுகிய | முழுக்கு, முழுகுதல் |
| மெழுகு | மெழுகினள் | மெழுகிய | மெழுகுதிரி, மெழுகல் |
| மொழி | மொழிந்தான் | மொழிந்து | மொழி, மொழிதல் |
| வழுவு | வழுவினன் | வழுவி | வழு, வழுவுதல் |
| வழுக்கு | வழுக்கினது | வழுக்கி | வழுக்குதல் |
| வழி | வழித்தான் | வழித்து | வழு, வழிதல் |
| வழங்கு | வழங்கினன் | வழங்கி | வழக்கு, வழக்கம் |
| வழிபடு | வழிபட்டான் | வழிபட்டு | வழிபாடு, வழிபடுதல் |
| வாழ் | வாழ்ந்தான் | வாழ்ந்து | வாழ்க்கை, வாழ்வு |
| வீழ் | வீழ்ந்தான் | வீழ்ந்த | வீழ்ச்சி, வீழ்கை, விழுதல் |

## அப்பியாசம்.

1. பயில், முயல் என்ற சொற்களடியாகப்பிறந்த முக்கால வினைச்சொற்களையும் கூறுக.

2. உணர், உலர், வார் என்ற சொற்களடியாகப்பிறந்த பெயரெச்சங்களையும் பெயர்ச்சொற்களையும் வசனத்தில் பிரயோகிக்க.

3. பின்வருவனவற்றைத் திருத்துக:—a. அவன் பயிற் செய்கையில் முயர்ச்சியும் பயிர்ச்சியும் இல்லாதவன். b. கடைக்குப்போய் சற்கரை வாங்கிவா.

4. பின்வரும் சொல்லடிகளினின்றும் பிறந்த பெயர்ச்சொற்களை எழுதுக:—ஆழ், ஒழுகு, தாழ், நிகழ், மகிழ், வழங்கு, வீழ், ஒழி.

PRINTED AT
Thamilan Press
JAFFNA.